Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

C/423

Job! With High Salary

Follow



Cima_UK, BIT

(O/L,A/L not necessary)

MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

SMS your name & course to 772 395 895 & Get Schol.

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 04 புதன்கிழமை (16.02.2011) பக்கங்கள் 16 ஓசை - 139

## அகற்றப்படுகிறது கடற்படை முகாம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை - நாரந்தனை தெற்குப் பகுதியில் பிரதான வீதியோடு அமைந்திருந்த கஞ்சதேவா எனும் கடற்படை மினிமுகாம் அகற்றப்படுகின்றது.


மேற்படி கடற்படை முகாம் கடந்த 1993 ஆம் ஆண்டு அப்பகுதியில் கடற்படையினரால் நிறுவப்பட்டு ஊர்காவற்றுறையின் தெற்குப்பகுதி பிரதான வீதியூடான பாதுகாப்பு மற்றும் ஊர்காவற்றுறை - சுருவில் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கான பாதுகாப்பு முகாமாகவும் ஊர்காவற்றுறை மத்திய பகுதியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பகுதிகளான ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்டைதீவு பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வருவதைத் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீரில் இயங்கும் கார்; இது ஓர் இலங்கையரின் சாதனை

### தொழில்நுட்பத்தை கைப்பற்ற உலகளாவிய போட்டி

(கொழும்பு)



தண்ணீரை எரிபொருளாகக் கொண்டு காரை இயக்கும் தொழில்நுட்பத்தை கண்டு பிடித்துள்ளார் இலங்கை வாலிபர் ஒருவர்.

இவரின் பெயர் துஷார எதிரிசிங்க. இவர் சோதனை முயற்சியாக மூன்று லீற்றர் தண்ணீரை எரிபொருளாக பயன்படுத்தி 300 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளார்.

தண்ணீரில் இயங்கக் கூடிய இக்காரின் முக்கியமான விடயம் சூழலுக்குப் பெரும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மஞ்சள் கோட்டு வீதிக்கடவை; அதன் மகத்துவம் இனித்தெரியும்

### பின்பற்றத் தவறினால் கைது

(கொழும்பு)

பாதையில் மஞ்சள் கோட்டுக் கடவையின் ஊடாக பாதையைக் கடக்காதவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகள் இந்த மாதம் 21 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நடவடிக்கை முதலில் மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நாடு முழுவதும் அமுலாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஞ்சள் கோட்டுக் கடவை மதிக்கப்படாமல் நினைத்த இடங்களில் பாதை மாறுவதால் பல அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. (15 ஆம் பக்கம் பார்க்க)


# அத்துமீறிய இந்திய மீனவர்கள்; நடுக்கடலில் மடக்கிப் பிடிப்பு!



(பருத்தித்துறை)

**பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் அணி அணியாக அத்துமீறி நுழைந்த இந்திய கடற்தொழிலாளர்களை உள்ளூர் மீனவர்கள் திரண்டு சென்று மடக்கிப் பிடித்துள்ளனர். நேற்று நண்பகலுக்கு சற்றுப் பின்னர் பருத்தித்துறை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் தலைகாட்டத் தொடங்கின.**

**இவற்றை அவதானித்த வடமராட்சிப் பகுதியின் கடற்தொழிலாளர்கள் சுமார் 100 பேர் வரையில் ஒன்று திரண்டனர். இவர்கள் தமது மீன்பிடிப் படகுகளில் சென்று இந்திய கடற்தொழிலாளர்களை சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்தனர்.** (16 ஆம் பக்கம் பார்க்க)



'புகழ் அனைத்தும் அல்லாஹ்தாலா ஒருவனுக்கே...' அனைவருக்கும் மீலாத் பெருநாள் வாழ்த்துக்கள் - தினமுரசு குடும்பம்.

## எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள்; செய்மதி ஆதாரம் இந்தியாவுக்கு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழைவது தொடர்பிலான செய்மதி படங்களை இலங்கை இந்தியாவிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் இந்த புகைப்படங்கள் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பிலான குற்றச்சாட்டினை நிராகரிக்கும் வகையிலேயே இந்தப் புகைப் படங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் பிரதிநிதிகளுக்கும், மீன்பிடித்துறை (15 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு நிராகரிப்பு 24 ஆம் திகதி விசாரணை


(கொழும்பு)

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு வட பகுதியில் தாக்கல் செய்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள்

### அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களின் மனிதாபிமான தேவைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிறைவுசெய்துள்ளார்.

நேற்றைய தினம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பருத்தித்துறை (15 ஆம் பக்கம் பார்க்க)

## கலகம் அடக்கும் பொலிஸார் யாழ். நகரில் குவிந்தனர்

### காரணம் புரியாமல் கலங்கினர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் வழமைக்கு மாறாக கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்ததோடு, இராணுவத்தினர் பாதுகாப்பு சோதனைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய மீனவர்கள் கைது; கடற்படைக்குத் தொடர்பில்லை

### கடற்படைப் பேச்சாளர்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையின் நாகர் கோவில் வரையான வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அத்துமீறி மீன் பிடித்தவேளை 18 மீன்பிடி இழுவைப் படகுகளில் தொழில் நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த 108 இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர். இந்த 18 மீன்பிடிப் படகுகளும் தற்போது பருத்தித்துறை முனை கடற்பரப்பில் தரிக்க வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்துடன் எந்தவகையிலும் கடற்படையினருக்கு தொடர்பில்லை என்று இலங்கை (15 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச செலவஙகளே!**

உள்ளே...

- ♦ நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2011 பகுதி II இன் பயிற்சி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.
- ♦ திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் வெளிவரும்.
- ♦ உங்கள் பிரதிக்கு முந்திக் கொண்டு விற்பனை முகவரை நாடுங்கள்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

காரைநகர் பிரதேச பகிரங்கசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3.00 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் மு.க.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கடந்த காலகூட்டறிக்கை வாசிக்கப்படுவதுடன், புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(50)

## வீதி விபத்தில் முதியவர் படுகாயம்

யாழ்.வேம்படிப் பகுதியில் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையாளி சபாபதி லேன், கொக்குவிலைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் (வயது 68) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். (மா)




முஸ்லிம் எயிட் (Muslim Aid) மற்றும் அமெரி கெயார் (Ameri Care) ஆகிய நிறுவனங்கள் இணைந்து சமீபத்திய பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு உலருணவு நிவாரணப் பொதிகளை வழங்கின. (படம் : ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

## நபி முஹம்மது பிறந்த தினம்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் அனைத்து முஸ்லிம்களின் பங்களிப்புடன் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பிறந்த தினம் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

நேற்று முன்தினத்திலிருந்து முஸ்லிம் பகுதியிலுள்ள பிரதான வீதிகள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. 21 வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் மீலாத் விழாவில் சிவலை பள்ளிவாசலில் விசேட உலமாக்களை வரவழைத்து பயான் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அதேநேரம் ஒஸ்மானியாக் கல்லூரியிலும் இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய பேச்சு, பாடல் போட்டிகள் நடைபெறவுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வு கடந்த 21 வருடங்களுக்கு முன்னர் தமிழ் அறிஞர்கள் முஸ்லிம் மக்களுடன் இணைந்து நபி முகம்மது (ஸல்) அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடியதை நினைவுபடுத்துகின்றன. (19)

### சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R017)

**தவறிவிட்டது**

சில்லாலையைச் சேர்ந்த பாவிலுப்பிள்ளை ஜெறாட் என்பவருடைய தே.அ.அட்டை (613223568v), இராணுவ அ. அட்டை (0905022370) என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்திற்கும், சில்லாலைக்குமிடையில் 08.02. 2011 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயது செய்து தினமுரசு விளம்பரப் பகுதியில் ஒப்படைத்துதவவும். (R018)

## பழைய பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தில் இருக்கின்ற பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பொது நூலகத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# காரைநகரில் 'அறிவுலகம்' நூலகக் கண்காட்சி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பன்முகத் தகவல் அறிவு விருத்திக்கான "அறிவுலகம்" எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் ஆரம்பமானது.

நூலக விழிப்புணர்வு ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணனும், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிறிவிக்னேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றல் மற்றும் இறைவணக்கத்தைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் நாடாவை வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய விழாக் குழு அமைப்பாளர் எஸ்.அருளானந்தம், தாம் பல இடங்களிலும் கண்காட்சியை நடத்தியபோதும், காரைநகரில் நடத்திய நோக்கம் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள், எழுத்தாளர்கள் உட்பட பலரும் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே என்று தெரிவித்தார்.

இந்த கண்காட்சியில் பழைமைவாய்ந்த நாணயங்கள், கருவிகள், விளக்குகள், கைவினைப் பொருள்கள், தகவல் தொழில் நுட்பப்படங்களுடன், இதழ்களின் உலகம் கற்றல் வட்டம் (முன்பள்ளி) உட்பட பல்வேறு பொருள்கள் காட்சிக்காக வைக்கப்பட்டன. தொடர்ந்து 10 நாட்கள் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (27, 50)

## பால் உற்பத்திக்கு வங்கி மூலம் கடன்

பால் உற்பத்தியாளர்களுக்கான கடன் வசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மானிப்பாய் இலங்கை வங்கிக் கட்டடத்திற்குப் பின்புறமாக அமைந்துள்ள பட்டர்பிளை முன்பள்ளிக் கட்டடத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கடனுதவி பெற விரும்புவோர் இதில் கலந்து அதற்கான விளக்கங்களைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (மா)

## இன்று மின்சாரம் தடைப்படும்

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சங்கானை, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, சில்லாலை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, சரவணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி மற்றும் திருநெல்வேலி-கலாசாலை வீதி, பாற்பண்ணைப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

L ESTY LEARNERS L

REGISTERED "A" GRADEDRIVING

TRAINIG SCHOOL

(REG. NO. 402)

அரசு அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய.
- வீதி ஒழுங்கு விதிகளைப் பற்றிய விசேட வகுப்புக்கள் நடாத்தப்படும்.
- செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைய Light Vehicle (Van), Heavy Vehicle (Bus) மற்றும் சிறிய பெரிய ரக மோட்டார் சைக்கிள்களிலும், முச்சக்கர வண்டியிலும் (Auto) விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சிகள் யாவும் 25 வருடங்களுக்கு மேலான அனுபவமும், தகுதியும் (Qualified Instuctor) கொண்ட பயிற்றுவிப்பாளரால் வழங்கப்படும்.

**அரச, தனியார் நிறுவனப் பணியாளர்களுக்கு அவர்கள் விரும்பிய நேரங்களில் பயிற்சி வழங்க ஒழுங்கு செய்யப்படும்.**

- வாடிக்கையாளர்களின் நலன்கருதி வடமராட்சியில் எமது கிளை நிறுவனம் மிக விரைவில் திறக்கப்படும்.

ESTY LEARNERS,
103, KANDY ROAD, JAFFNA.

C/446

உரிமையாளர் :
சொக்கலிங்கம் பாஸ்கரன்.
0771749387

நல்லூர் சரவணா ரெக்ஸ்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்

மாபெரும் மலிவு விற்பனை

♦பட்டுச்சாறிகள் ♦சில்க்ஸ் சாறிகள் ♦பஞ்சாபிகள் ♦கொட்டன் சாறிகள் ♦பஞ்சாபித் துணிகள்

ஏராளம்! ஏராளம்

காலம்:- இன்று முதல் தொடக்கம் 20.02.2011 வரை
இடம்:-நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக (முடமாவடி)
நேரம்:- காலை 9.30 மணிமுதல் இரவு-8.30 மணிவரை.

அலை அலையாக வாரீர் !!
அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!
எங்குமே காணாத அதி சிறப்புத் தள்ளுபடி

வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்

ஐந்து நாட்கள் மட்டுமே

C/442



*மனிதனே உன்மனதில் தோன்றும் எண்ணத்தை உடனே சொல்லிவிடு. இல்லை என்றால், சில நாள் கழித்து உனது கருத்தை நீ வேறு ஒருவன் வாயிலாக கைகட்டிநின்று கேட்கவேண்டிவரும்.*

*-எமர்சன்-*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## விடுதலையை விரைவுபடுத்துக

மிக நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்க விருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நிதி அமைச்சராகப் பதவி ஏற்ற ரவூப் ஹக்கீம் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில், தடுப்புக்காவலில் உள்ள தமிழக் கைதிகள் விடயத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

இக்கைதிகள் விடுதலை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு பத்துப்பேர் அடங்கிய குழுவொன்றை சட்டமா அதிபர் திணைக்களம் நியமித்துள்ளது.

இக்குழு அவர்களின் விடுதலை தொடர்பாக சாதகமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் செய்த குற்றம் என்னவென்ற ஆராய்ந்து கண்டறியப்படவில்லை.

குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யாமலும், விசாரணைகள் எதுவும் இன்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இக்கைதிகள் உள ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையிலேயே சிறைகளில் வாடுகின்றனர்.

இவர்கள் பல்வேறு தடவைகள் தம்மை விடுவிக்கக் கோரி தாம் அடைத்துவைக்கப்பட்டுள்ள சிறைகளில் உண்ணாவிரதம் இருந்தும் சிறைக்கூரை மீது ஏறியும் போராட்டங்கள் நடத்தியிருந்தனர்.

இப்போராட்டங்கள் சிறைகளில் நடைபெறும் போதெல்லாம் அவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சுயலாபம் தேடும் அரசியல் தலைமைகள் போராட்டங்கள் முடிவுக்கு வந்தபின் மௌனித்துப்போய்விடுகின்றன.

வெலிக்கடை, பூசா, அனுராதபுரம் ஆகிய இடங்களில் சிறை வைக்கப்பட்டுள்ள இவர்களை அவசரகாலச்சட்டத்தின் கீழும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் கைது செய்ததாக அன்று முதல் இன்றுவரை அரசு கூறிவருகிறது.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்தநிலையிலும், சரணடைந்த புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையிலும், யுத்தம் நடைபெற்ற போது சந்தேகத்தின் பேரில் கைது செய்த இவர்கள் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாது இருப்பது ஏன்?

இவ்வாறு ஆண்கள் மட்டும் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. பெண்களும், அதுவும் சிறைகளில் பெற்றெடுத்த குழந்தைகளுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களைத் தனியாக சிறையில் தடுத்துவைப்பதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக களுத்துறையில் திறந்த வெளிச்சிறைச் சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இக் கைதிகளின் விடுதலை நீதி அமைச்சுடன் மட்டும் தொடர்பான விடயமல்ல. இதில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்குமுள்ளது என்று நீதி அமைச்சர் தெரிவித்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேவேளை, சட்டமா அதிபர், மொகான்பீரிஸ் உட்பட நான்கு பேர் அடங்கிய குழுவினர் ஓமந்தை, பூசா தடுப்பு முகாம்களுக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களைப் பார்வையிட்டபின், அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பரிந்துரைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

- *ஆசிரியர்*

## தொழில்நுட்ப வல்லுநர் பணிப்பகிஷ்கரிப்பால்

# போதனா வைத்தியசாலையின் அன்றாட செயற்பாடுகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நிறைவுகாண் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒருநாள் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக யாழ்.மாவட்ட அரச வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் நேற்றுக்காலை முதல் பாதிக்கப்பட்டிருந்தது.

இலங்கை பூராவும் அரச வைத்தியசாலைகளில் நிறைவு காண் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்கள் அதாவது மருந்தாளர்கள், எக்ஸ்றே தொழில் நுட்பவியலாளர்கள், ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் தமக்கு பதவியுயர்வு மற்றும் சம்பள உயர்வு கோரி இவ் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8.00 மணிமுதல் இன்றுகாலை 8.00 மணிவரை இவ் ஒருநாள் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெறுகின்றது. இதன் கீழ் யாழ்.மாவட்ட அரச வைத்தியசாலைகளிலும் இத்தகைய பணிப் பகிஷ்கரிப்பு நடைபெறுகிறது.

இதன் காரணமாக யாழ்.மாவட்ட அரச வைத்தியசாலை களில் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்களின் சேவை அத்தியாவசிய உயர்பாதுகாப்பு மட்டும் வழங்கப்பட்டுவருகிறது.

சாதாரண நோய்களினால் பீடிக் கப்பட்டவர்களும் மற்றும் நோயாளர்களும் வைத்தியசாலைகளுக்கு பெருமளவில் வந்திருந்த போதும் அவர்கள் வைத்தியர்களால் பார்வையிடப்பட்ட போதும் அவர்கள மருந்துப்பொருட்கள் பெறவோ எஸ்க்றே எடுக்கவோ, ஆய்வு கூட சிகிச்சை பெறவோ முடியவில்லை. இதனால் நோயாளர்கள் பெரிதும் அவதியுற்றதைக் காண முடிந்தது. அத்துடன் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுபவர்களின் நிலையும் இவ்வாறே அமைந்திருந்தது. (பா),104

# நாட்டுப்புற கலைகளின் அரங்கேற்ற நிகழ்வுகள்

(தும்பளை)

யாழ்ப்பாண கிராமிய இசை விழாவை முன்னிட்டு நாட்டுப்புறக் கலைவடி வங்கள் பல்வேறு இடங்களில் அரங்கேற்றப் பட்டுவருகின்றன.

அந்தவகையில் நாளை வியாழக்கிழமை நார்கோவில் முன்றலில் காலை 9.00 மணிக்கு கப்பற்பாட்டும் பிற்பகல் 7 மணிக்கு கரகம் போன்ற கலைவடிவங்களும் மார்ச் மாதம் 2ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சுழிபுரம் அரசடி ஞானவைரவர் கோவில் முன்றலில் பப்பிரவாகமும், 05 ஆம் திகதி தெல்லிப்பளை மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலில் காலை 9.00 மணிக்கு வீரபத்திரவசந்தன் கூத்தும்,மாலை 7 மணிக்கு வில் லுப்பாட்டும், இடம்பெறவுள்ளது.

7ஆம் திகதி திங்கட்கிழமை முள்ளியவளை காட்டுவிநாயகர் கோவில் முன்றலில் பிற்பகல் 7 மணிக்கு கோவலன் கூத்து ஆகிய நாட்டுப்புற கலைகள் அரங்கேற் றப் படவுள்ளன.நோர்வே தூதுவராலயத்தின் அனுசரணையுடன் சேவாலங்கா மன்றத்தினால் இக்கலை வடிவ நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றனர். (62)

# சமூக ஆர்வலர் நினைவாக தும்பளையில் நூலகம் திறப்பு

(பருத்தித்துறை)

சமூக ஆர்வலரும், நலன் விரும்பியும்,சிறந்த வாசகனுமாகிய அமரர் சி.சிவபாதம் அவர்களின் நினைவு நூலக மொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மூத்த எழுத்தாளர் தெணி யான் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

தும்பளை தெற்கு,பருத்தித்துறையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நூலகத்தை திறந்து வைத்துப் பேசுகையில்,

நான் பல நிகழ்வுகளில் கலந்து உரையாற்றியுள்ளேன். ஆனால் இன்று நடைபெறும் நிகழ்வு எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கின்றது. தனியொரு மனித இழப்பின் 31ஆம் நாள் நிகழ்வின் போது இப்படி ஒரு நினைவு நூலகம் ஆரம்பிப்பது எவ்வளவு தூரம் வளரும் இளைய சமுதாயத்திற்கு வாய்ப்பளிக்கும் என்று நினைக்கும் போது சந்தோஷமாக உள்ளது. மாணவர்களுக்கும் உறவினர்களுக்கும் இது நல்லதொரு வாய்ப்பு. இதை எல்லோரும் பயன்படுத்த வேண்டும். வெறும் சம்பிரதாயங்களுக்கு அடிமையாகி, தேவையற்ற விதத்தில் பொருட்செலவை ஏற்படுத்துவதைவிட இதுபோன்ற நல்ல செயல்களைச் செய்து கொள்வதை நாம் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த நூலகத்தில் உள்ள நூல்கள் பொழுது போக்கிற்கான கதைகளாக இருக்குமோ என நினைத்தேன். ஆனால் இங்கே இருக்கின்ற நூல்கள் மிகவும் பெறுமதியானவை. தேடமுடியாத சொத்துக்கள் என்று தெரிவித்தார்.

சி.மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசியுரையை வே.தியானந்தராஜாக் குருக்கள் வழங்கிக் கௌரவித்தார்.

நினைவுரைகளை அதிபர்.செ. செல்வச் சந்திரன்,சி.சிவபுண்ணியம் (அகில இலங்கை சமாதான நீதிவான்) இ.அன்ரனி (பருத்தித் துறை சமுர்த்தி வங்கி முகாமை யாளர்) த.வேலாயுதம் (வையாபுரி), நா.விஸ்வலிங்கம்,திருமதி ஆனந்தராணி (நெல்லை லதாங்கி) ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் கலந்து கொண்டோர், நூல்களை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (மா)

## சம்பளப்பட்டியலில் கையொப்பமிடவும்

(நெல்லியடி)

முல்லைத்தீவில் நிரந்தரமாகக் கடமையாற்றும் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் தங்களுக்கான சம்பளப்பட்டியலில் கையொப்பமிடுமாறு அழைக்கப் பட்டுள்ளனர்.

குறித்த ஆசிரியர்கள் தற்போது கற்பிக்கும் பாடசாலைகளில் இன்றைய தினம் கையொப்பமிடுமாறு சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (17)

## பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வட்டுக்கிழக்கு சித்தங்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று (16.02.11) பி.ப 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

எஸ்.சிவபாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,கிராம அலுவலர் ஆகியோர் சமூகமளிக்கவுள்ளனர்.

எனவே மேற்படி சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (மா)

## விஞ்ஞானமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(தொல்புரம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் விஞ்ஞானமாணி (B.Sc) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் பங்குனி மாதம் 12ஆம் திகதியாகும். மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் பங்குனி மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள அடிப்படை ஆங்கில அறிவுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

இதேவேளை இக் கற்கை நெறி தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் பிறவுன் வீதியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தர விஞ்ஞானபாடங்கள் மூன்றில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும். (26)

## பாடசாலை உபகரணம் வழங்கல்

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமூக அபிவிருத்தி நிதிமூலம் வடமாகாண பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கல்வி உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# தீவக மக்களுக்கான எனது சேவை தொடரும்

# ஜனாதிபதியையும் அழைத்துவர ஏற்பாடு செய்வேன்

## கட்டடத் திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தமட்டில், இப்பகுதியின் முக்கிய நிறுவனமாக இருப்பதுடன் தீவின் வளத்திற்கும் உதவும் முக்கிய நிறுவனமாக இச்சங்கம் திகழ்வதால் உங்கள் அனைவரதும் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு அவசியம் தேவையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைமைச் செயலக மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் புலவர் அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களிடம் நெடுந்தீவு மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோது நான் இந்த ஊரைச் சேர்ந்தவன் என நினைத்துக்கொண்ட அவர் தானும் இங்குவர வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார். விரைவில் அவரை இங்கு அழைத்து வர முயற்சி செய்வேன்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நான் இங்கு எப்போது முதலில் வந்தேனோ அன்று முதல் இன்று வரை அவற்றுக்குத் தீர்வு கண்டு குறைகளைப் போக்குவதில் கவனமெடுத்து வருகின்றேன.

உள்ளூராட்சித் தேர்தல் வழக்குகள் குறித்து முடிவு இரண்டொரு நாளில் வெளிவரும். நீங்கள் கடந்த காலம் போன்று எங்களுக்கு உங்களது ஆதரவைத் தொடர்ந்து வழங்குவதன் மூலம் எமது பலத்தை உறுதிப்படுத்தினால் நிச்சயமாக நீங்கள் குறிப்பிடும் ஏனைய தேவைகளையும் நிறைவேற்ற முடியும் என்றார்.

புலவர் அரியநாயகம் தனது தலைமையுரையில், அமைச்சர் எமது பகுதிக்காக ஆற்றிய சிறந்த பணிகள் இன்று மக்கள் நிம்மதியாக இருக்கக்கூடிய வழியைத் தோற்றுவித்துள்ளது. எமது குறைகள் தேவைகளைக் கேட்டறிந்து உடன் தீர்வுகாணும் ஒருவராக அமைச்சர் எமது கிராமத்திற்குக் கிடைத்த செயல்வீரன்.

நெடுந்தீவின் வரலாற்றில் இந்தப் பிரதேசத்தின் மன்னனாக வெடியரசன் இருந்ததாகச சொல்லப்படுகிறது. அதன்பின் ஒரு மன்னராக இந்த மண்ணுக்கு மக்களுக்கு சேவையாற்றி வருபர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே என்று கூறினார்.

முன்னதாகத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பல.நோ.கூ.சங்கப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

சங்கத் தலைவர் மற்றும் மக்கள் அமைச்சருக்கு முடிசூட்டி ஆளுயர மலர் மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

அமைச்சர், துறைமுகத்தில் வைத்து விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு கடற்படை அதிகாரி லெப். கொமாண்டர் வித்தானகே, பொலிஸ் அதிகாரி காரியவசம், ஊர்காவற்றுறை பிரதி பொலிஸ் அதிபர் லலித்பிரேமரட்ண ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் 530 அடி நீள பாடசாலை மைதான மதில் கட்டுவதற்கான அத்திவார அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தி.சத்தியபாலனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி, ஈ.பி.டி.பி கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனா.

## கொடிகாமம் வரணி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

கொடிகாமம் வரணி வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது உள்ளதால் இவ்வீதியுடாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் இவ்வீதி முற்றாக சேதமடைந்துள்ளதால் வாகனங்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்யவேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியில் குன்றும், குழியுமாகக் காணப்பட்ட பகுதிகள் தார்க் கலவை மூலம் செப்பனிடப்பட்ட போதிலும் பாரிய குழிகள் செப்பனிடப்படாமல் இருப்பதனால் வாகனங்களை ஓட்டிச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருப்பதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை முழுமையாகச் செப்பனிட்டுப் புனரமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பொன்விழா ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரியின் பொன்விழா நிகழ்வை முன்னெடுக்கும் நோக்கில் எழுத்தாக்கப் போட்டிகளை நடத்த பொன்விழா மலர்க்குழு முன்வந்துள்ளது.

கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடாத்தி முதல் மூன்று இடங்களையும் பிடிக்கும் ஆக்கங்களுக்கு பணப்பரிசுகள் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படடுள்ளது.

தாதியத்தின் மகத்துவம் என்னும் தலைப்பில் 200 சொற்களில் அமைந்த கவிதைகளையும், 600 சொற்களில் அமையும் "இருபதாம் நூற்றாண்டில் இலங்கைத் தாதியத்தின் எழுச்சியும், எதிர்நோக்கும் சவால்களும், அதற்கான தீர்வுகளும்" தலைப்பிலான கட்டுரைகளையும், தாதியத்தைத் தழுவிய தாக அமையும் சிறுகதைகளையும் எழுதி அனுப்பலாம்.

இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பாக "பொன்விழா மலர்க் குழு" தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுத்தாக்கங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## யுத்தகாலத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிய சேவைகள் பாராட்டத்தக்கது

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தின் போது வடக்கிலும் கிழக்கிலும் அல்லற்பட்ட மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆற்றிய பணி மகத்தானது என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் முன்னாள் தலைவரும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஆலோசகருமான டாக்டர் ஆர்.தெய்வேந்திரம் பாராட்டுத் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ்.குடாநாட்டில் இருந்து தமது அலுவலகத்தை மூடிச்செல்லும் நிலையில் அவர்களுக்கான சேவைநலன் பாராட்டுநிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ். குடாநாட்டில் சேவையாற்றி வருகின்றனர். அவர்களது சேவை அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. யுத்தகாலத்தின்போது அவர்களது சேவை போற்றப்படவேண்டியதாக இருந்தது. மருத்துவம், தடுப்பில் உள்ளவர்களுக்கான சேவைகள், கப்பற் போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றைக் கூறலாம்.

முல்லைத்தீவில் யுத்தம் நடைபெற்றபோது அவர்களது கப்பல் இல்லாதிருந்தால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்திருப்பார்கள். அரச உத்தியோகத்தர்கள் எமது பணிகளைத் திறம்பட செய்திருக்க முடியாது இருந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஜெய்ப்பூர் நிறுவனத்தைச் சேர்ந்த யோன்சன் கருத்துத் தெரிவிக்கையில்:

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகவும் சகல வழிகளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்கை அவயவ நிபுணர் பீலிக்ஸ் உறுதுணையாக இருந்துள்ளதாகவும் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எனவும் தெரிவித்த அவர், யுத்தகாலத்தின் போது செயற்கை அவயவ உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் அவற்றைப் பெற்றுத்தருவதற்கும் செஞ்சிலுவைச் சங்கம் உதவியது. அத்துடன் குமண கப்பல் மூலமாக யாழ்.குடாநாட்டில் இருந்து திருகோணமலைக்கு எமது பணியாளர்களை அழைத்துச் சென்று பயிற்சிகளையும் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியது எனவும் தெரிவித்தார். (பா,மி)

## சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தினவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் தலைவர் சிவநெறிப்புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளா திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வாா.

சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தலைமையில் "குறள்வழி பெரிதும் வலியுறுத்துவது அறத்துப்பால் கருத்துக்களா? பொருட்பால் கருத்துக்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும்.

திருக்குறள் மனனம், பண்ணிசைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## அழுகிய பனங்கிழங்குகள் விற்பனையில்

(கொட்டடி)

யாழ்நகரில் பழுதடைந்த பனங்கிழங்குகள் விற்பனைப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சூடாக்கி அவித்த இந்தப் பனங்கிழங்குகள் இரண்டு நாட்கள் கழித்தும் குளிரூட்டி விற்கப்படுகின்றன. இவ்வாறு பழுதடைந்த பனங்கிழங்குகளைச் சாப்பிட்ட சிலர் வாந்தி நோய்க்கு உள்ளாகியதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (25)

## உணவகங்களைப் பதிவு செய்ய அறிவுறுத்து

(வேலணை)

வேலணை பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து உணவகங்களையும் இம்மாதம் இறுதிக்குள் பிரதேசசபையில் பதிவு செய்து அதற்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேலணைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் ம.அனுசுதன் கேட்டுக்கொண்டுள்ளார்.


பதிவு செய்யாமல் அவற்றுக்கான உரிமங்களைப் பெற்றுக் கொள்ளாது நடத்தப்பட்டு வரும் உணவகங்கள் மீது சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

5) இரண்டு ரூபாவில் எத்தனை 25 சத நாணயங்கள் உண்டு?

..............................................................................................................

6) 237, 115, 496, 325, 187 இவ்வெண்களை இறங்கு வரிசைப்படுத்தினால் நடுவில் வரும் எண் யாது?

..............................................................................................................

7) 


இவ் எண் சட்டம் காட்டும் எண் யாது?

..............................................................................................................

8) 4837 இல் 8 இன் பெறுமானம் யாது?

..............................................................................................................

9) 4830 ml இல் தருக?

..............................................................................................................


10) இன்று சனிக்கிழமை ஆயின் நேற்று முதல்நாள் என்ன கிழமை?

..............................................................................................................

**11) ஒரு குறித்த பாடசாலையில் மாணவர் விரும்பும் உணவுகள் பற்றிய தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.**

| உணவு | பிள்ளைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 1. இடியப்பம் | 75 | 35 |
| 2. பிட்டு | 35 | 25 |
| 3. பாண் | 60 | 40 |
| 4. தோசை | 30 | 70 |

1) மேற்படி தகவல்களை சலாகை வரைபில் வரைந்து காட்டுக?




2) பாண் உணவை உண்ட ஆண்களை விட இடியப்பம் உண்ட ஆண்கள் எத்தனைபேர் அதிகம்?

..............................................................................................................

3) எல்லா உணவுகளையும் உண்ட ஆண்கள் எத்தனை பேர்?

..............................................................................................................

4) எல்லா உணவுகளையும் உண்ட பெண்கள் எத்தனை பேர்?

..............................................................................................................

**12) "உமது பாடசாலை பரிசளிப்பு விழா" பற்றி நான்கு சொற்களுக்குக் குறையாமல் பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

1) ..............................................................................................................
2) ..............................................................................................................
3) ..............................................................................................................
4) ..............................................................................................................
5) ..............................................................................................................
6) ..............................................................................................................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

நேரம் -1மணி 15நிமி

## கல்வி முரசு 01



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**1) கீழே தரப்பட்ட பாடலை வாசிக்குக.**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

கவிமணி.சி.தேசிகவிநாயகம்பிள்ளை.

**பாடல் அடிகளைக் கொண்டு 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

1) "உடல்" என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக?

2) நோயாளிக்கு இனிய வாழ்வு தருவது எது?

3) சுகம் என்பதன் எதிர்ச்சொல் தருக?

4) இடமெங்கும் என்பதைப் பிரித்தெழுதுக?

5) இரண்டாவது பாடலில் உள்ள அடுக்குமொழியினை எழுதுக?

6) சுகம் எங்கு உண்டு எனக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்?

7) உலகில் இன்பம் உடையவர் யார்?

8) "நீண்ட ஆயுள் பெறுவாய்" என்ற வாக்கியத்தின் எழுவாய் யாது?

9) "பெறுவாய்" என்பதை நிகழ்காலத்தில் எழுதுக?

10) இந்தப் பாடலைப் பாடியவர் யார்?

**2) சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1) ஆச்சரியத்துடன் / அப்பெரியவரை / பார்த்தான் / சீடன்

2) அதற்கு / எம்மில் / கண்டிக்குச் / பலர் / இல்லை / சென்றதே / முன்பு

3) வீசிவிட்டான் / தோலை / பாதையில் / வாழைப்பழத் / பாபு

4) மயிலின் / பாடியது / வானம்பாடி / பாட்டுப் / கூட்டத்தை / வாழ்த்திப்

5) தாத்தா / கழுதைமீது / இறங்கினார் / அமர்ந்திருக்க / கீழே

**3) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

(வெத்திலை / வெற்றிலை / வெத்றிலை / வெற்திலை)

(முபட்ச்சி / முயர்ச்சி / முயற்சி / முயற்ச்சி)

(புண்ணாக்கு / பின்னாக்கு / புன்னாக்கு / பிண்ணாக்கு)

(ஆராச்சி / ஆராட்ச்சி / ஆராட்சி / ஆராய்ச்சி)

5) கழுதைக்குத் தெரியுமா.....................................................வாசனை.

(கருப்பூர / கர்ப்பூர / கற்பூர / கட்ப்பூர)

**4) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

i) We buy...............................................................from the books shop.

(Stamps, books, bags, Bread)

வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

ii) .............................................................................



.....................................................................

**5) கருத்தினைத் தமிழில் எழுதுக.**

i) Good Evening :.........................................................................

ii) Please go there :.........................................................................

iii) What is that? :.........................................................................

**6) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது தமிழில் எழுதுக.**

1) மல்லி ............................................. 2) புட்டுவ :.............................................

3) வாடிவென்ன ............................................. 4) பொன்ன :.............................................

5) பொத்த .............................................



**7) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) இலங்கையின் தேசிய பறவை?
   1) கிளி 2) காட்டுக்கோழி 3) புறா 4) வாத்து

2) பின்வருவனவற்றுள் ஒருவித்திலைத் தாவரம்.
   1) வேம்பு 2) பலா 3) மா 4) வாழை



3) பின்வருவனவற்றுள் தாவர உண்ணி எது?
   1) சிங்கம் 2) புலி 3) பசு 4) கரடி


4) மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று?
   1) உணவு 2) கோயில் 3) மைதானம் 4) முற்றம்

5) தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் உபகரணம்.
   1) சாந்தகப்பை 2) குறடு 3) தூக்குக் குண்டு 4) உளி

**8) பின்வரும் தாவரங்களின் பெயர்களின் பெயர்களை எழுதுக.**

(சீதேவியார் செங்கழுநீர், முள்முருங்கை, முருங்கை, நன்னாரி)










1)........................................ 2)........................................ 3)........................................ 4)........................................

**9) பின்வரும் படங்களில் உள்ள பறவைகளின் பெயரை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(சேவல், பருந்து, மரங்கொத்தி, வாத்து)

1)........................................ 2)........................................ 3)........................................ 4)........................................

**10) பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) ஒரு பிள்ளைக்குத் தினமும் காலை, மதியம், மாலை உணவாக இரண்டு பிஸ்கற்றுக்கள் வீதம் வழங்கப்படுகின்றது. ஐந்து நாட்களுக்கு வழங்க எவ்வளவு பிஸ்கற்றுக்கள் தேவை?

.........................................................................................................

2) பி.ப. 1.10 இற்கு கொழும்பு தரிப்பு நிலையத்துக்கு வரவேண்டிய பஸ் வண்டி பி.ப.12.50 இற்கு வந்து சேர்ந்தது எனின் எவ்வளவு நேரம் முந்தி வந்தது?

.........................................................................................................

3) 1 kg வாழைப்பழத்தின் விலை ரூ.32.00 ரூபா எனில் 500 g வாழைப்பழத்தின் விலை யாது?

.........................................................................................................

4) 120 புத்தகங்கள் நான்கு வகுப்புக்குச் சமனாகப் பிரிக்கப்பட்டன. ஒரு வகுப்புக்கு எத்தனை புத்தகங்கள் கிடைத்தன?

.........................................................................................................

# தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி எம்.பி தெரிவிப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசம் பெரும் நிலப் பரப்பையும் மக்கள் தொகையையும் கொண்ட பிரதேசம். நாவற்குழி தொடக்கம் எழுதுமட்டுவாள் வரை உள்ள பெரும் பகுதியை ஒரு பிரதேச செயலகத்தின் கீழ் நிர்வாகம் செய்வதென்பது பெரும் இடர்பாடான விடயம்.

எனவே, தென்மராட்சி இரு பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் பரவலாக்கப்படுவதுடன், சாவகச்சேரி பிரதேசசபையும் இரண்டு பிரதேசசபைகளாகப் பிரிக்கப்பட்டு நகர சபையும் பிரதேசசபைகளையும் கொண்டதாக தென்மராட்சிப் பிரதேசம் மறுசீரமைக்கப்பட்டு மக்களுக்கான இலகு சேவை சிறந்த முறையில் வழங்குவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு மூத்ததலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 32 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்றத் தலைவர் ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பிரதேசம் அபிவிருத்தியில் நீண்டகாலம் பின்நோக்கித் தள்ளப்பட்ள்ளது. மக்களுக்கான சகல வசதிகளும் செய்து கொடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

நகரில் கடைத்தொகுதி அமைப்பதற்கும் தார்வீதி அமைப்பதற்கும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளது. இதற்கு 30 மில்லியனுக்கு அதிகமான தொகை தேவைப்படலாம் என நகராட்சி மன்றத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

கடைத் தொகுதிக்கான ஆரம்ப கட்ட திட்டவரைபை சாவகச்சேரி நகராட்சி மன்ற சபை நிதியில் இருந்து ஆரம்பித்து மேற்கொண்டு வடமாகாணத்துக்கு ஒதுக்கும் வேறு நிதிகளில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். உள்ளூராட்சிச் சபைகளுக்கு இவ்வருடம் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

75 மில்லியன் முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்படும். இந் நிதிமூலம் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்பட உள்ளது.

சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் சாவகச்சேரி வர்த்தகர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் அவர்களை நல்ல பாதையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் இட்டுச் செல்லுகிறது. ஏனைய பிரதேச வணிகர் மன்றங்களும் இப்படியான சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு எம் மக்களின் உயர்ச்சிக்காய் பாடுபட வேண்டும். சுமுகமான, புரிந்துணர்வான ஒத்துழைப்பை தனியார் நிறுவனங்கள் அரச நிறுவனங்களுக்கு வழங்கும் போது அரச நிறுவனங்கள் ஊக்கமடைந்து கூடிய பங்களிப்பைச் செய்ய உந்தப்படுகிறார்கள் என்றார்.


நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்கீல், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன், 523 ஆம் படைப்பிரிவு கட்டளைத் தளபதி உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (11)

## உரிமைகோராத சடலங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த 11 ஆம் திகதி பண்ணைக் கடற்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 60 வயது மதிக் கத்தக்க வயோதிபருடைய சடலமும், சுகயீனம் காரணமாக யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தரால் யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 10



ஆம் திகதி சேர்க்கப்பட்டுப் பின்னர் இறந்த 55 வயது மதிக்கத்தக்க சுப்பையா சந்திரபாலன் என்பவரது சடலமும் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (52)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(வேலணை)

மண்டைதீவு றோமன்கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முன்தினம் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் யோன் கொலின் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பகுதி அமைப்பாளர் சி. சிவராசா (போல்) நீர்பம்பி ஒன்றினை பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (05)

# மாணவர்கள் வெற்றி தோல்வியை சமமாக மதிக்கப் பழகவேண்டும்

## ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி அதிபர்

(நெல்லியடி)

மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியை சரியான முறையில் பயன்படுத்த முன்வர வேண்டுமென

ஸ்ரீபாத தேசிய கல்வியயற் கல்லூரி அதிபர் ஆறுமுகம் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி. அதிபர் சேதுராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

இன்றைய காலத்தில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி அதன் முறையான பயன்பாடுகளை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும். விளையாட்டுப் போட்டியில் வெற்றி தோல்வியை சமமாக மதிக்கப்பழகும் மனப்பாங்கை மாணவர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். தோல்வி அடைநது விட்டோமே என்று மனம்தளராது முயற்சி செய்து திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி இந்திரமதி சுந்தரலிங்கம் வழங்கிக் கௌரவித்தார். (17)


## ஆதினியின் இன்றைய பலன்

(16.02.2011 – புதன்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

விகிர்தி மாசி 04

இராகுகாலம் 12.33– 2.03, சுபநேரம் 5.03 –6.33, திரியோதசி மாலை 6.40, புனர்பூசம் மு.ப. 8.00 சித்தம், பிரதோஷ விரதம் , நபிகள் நாயகம் பிறந்ததினம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– காரியத்தடை, பணமுடை, நினைத்தகாரியத்தில் தோல்வி.

ரிஷபம்:– சாதுரியமாக நடத்தல், பெரியோர் வசியம், காரிய ஜெயம்.

மிதுனம் :– தொழிலால் லாபம், நண்பர் உதவி, நற்செயல்.

கடகம்:– வீண்செலவு, பொருள் இழப்பு, மனக் குழப்பம்.

சிம்மம்:– நற்செய்தி, மனமகிழ்வு, அயலவர் உதவி.

கன்னி :– மனக்குழப்பம், காரியத்தடை, அலைச்சல் மிகுதி.

துலாம் :– எதிலும் வெற்றி, செய்தியால் மகிழ்ச்சி, தூரதேசப் பயணம்.

விருச்சிகம்:– உதவிகள் செய்தல், ஆலய வழிபாடு, நண்பர் உதவி.

தனுசு:– அரச பயம், பொருள் இழப்பு, விதண்டாவாதம்.

மகரம்:– பூரிப்பு, காரிய சித்தி, தந்தைவழி உதவி.

கும்பம் :– தேவையில்லாத பேச்சு, காரிய நட்டம், அவப்பெயர்.

மீனம்:– நண்பர் நேசம், திடீர்முடிவு, போட்டிகளில் வெற்றி.


# பதினைந்து மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் 50 வீடுகள் புனரமைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 15 மில்லியன் ரூபா செலவில் 50 வீடுகள் புணர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளதுடன், இவை எதிர்வரும் பெப்ரவரி 22 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இவற்றில் 15 வீடுகள் அரச ஊழியர்களுக்கு கையளிக்கப்படவுள்ளதுடன், ஏனைய 35 வீடுகளும் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ள அதேவேளை, வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ் வீடுகள் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்திற்கு போட்டோப்பிரதி இயந்திரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

லண்டன் வாழ் காரைநகர் மக்களின் நிதியுதவியுடன் பெறப்பட்ட போட்டோப் பிரதி இயந்திரத்தைக் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மகாராணி க.சோமசேகரம் அதிபர் கணேசமூர்த்தியிடம் கையளித்துள்ளார். கடந்த வாரம் இக் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (10)



யாழ். மாநகரசபையினால் 24 பழக்கடைகள் நேற்று முன்தினம் யாழ். பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பழக்கடைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்து உரையாற்றுவதையும், தலைமையுரையை யாழ். மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோர்களையும் காணலாம். (52)

# மீலாத் சிறப்பு

## அருட்கொடையே! அண்ணலாரே!



அனைத்தையும் படைத்து அவற்றிக்கு அழகையும் கொடுத்த ஏக இறைவனே!

திருத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை இம் மானிடர்க்கு வழிகாட்டியமைக்கு (சுக்ரன் ஜஸீலா) செந்தாமரையாய் உதித்த எம் பெருமானார் (ஸல்) அவர் ஜாஹிலியா என்னும் அறியாமையை நீக்கி மக்களை இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் சென்றமையை நாம் யாவரும் இவ்வேளையில் இன்நாளில் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

எத்தனையோ இன்னல்களை கடந்து தமது பொறுமையாலும் புத்திசாதுலியத்தாலும் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பி அதில் சாந்தி, சமாதானம் ஒற்றுமை என்ற நல்லொழுக்கத் தூண்களை உறுதியாக நிறுத்தி "இஸ்லாம்" என்ற தூய மார்க்கத்தை நிலைநாட்டினார் எம் பெருமானார் முஹம்மத்(ஸல்) அவர்கள்.

கடந்துவிட்ட பல வருடங்களின் பின்னர் பல கசப்பான அனுபவங்களை மறந்தவர்களாக எம் சொந்த மண்ணில் கால் பதித்துள்ள நாம் "ரபியுல் அவ்வல்" மாதம் 12 ஆம் நாளான இன்று அன்னாரின் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழும் வேளையில், அவர் வழிகாட்டிச் சென்ற நற்குணங்களையும், குறிக்கோள்களையும், நேர்மையுடனும் நீதியுடனும் நடைமுறைப்படுத்துவதில் நாம் நாட்டம் கொண்டவர்களாக வாழவேண்டும். எத்தகைய எதிரியையும் துன்பிக்கும் சக்தி நிறைய இருந்தும் மன்னிக்கும் மனப்பக்குவத்தால் பலரது மனதைக் கவர்ந்த பெருமை படைத்த உத்தமர் வழிநடக்க நாம் அனைவரும் உறுதி பூணுவோம். இன்னாளில் இதற்கான உறுதிதனைப் புரிய அல்லாவிடம் பிரார்த்திப்போம்.

அல்ஹம்து லில்லாஹ்

மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ் (காஸிமி)

## புகழுக்குரிய பூமான் நபி [ஸல்]

புகழ் அனைத்தும் அல்லாஹ்தாலா ஒருவனுக்கே சொந்தமாகும். ஸலாத்தும் ஸலாமும் எமதருமை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரைப் பின் பற்றிய அனைத்து நல்லடியார்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாமிய சகோதரர்களே!


எமது பெருமானார் ரஸூலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு சாதாரண மனிதர் அல்ல. மாறாக "வஹ்யு" அறிவிக்கப்படும் மனிதர் என்று குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

ஏனென்றால் "வஹ்யு" உடைய அந்தஸ்துதான் மேலான பதவியாகும். இப்பதவி (நபிமார்களுக்கே பிரத்தியேகமானதாகும்) நபிமார்கள் ஔலியாக்களை விடவும் மேலானவர்கள். அதே சமயம் நபிமார்களும் கூட எல்லோரும் ஒரே அந்தஸ்தில் உள்ளவர்கள் இல்லை. காரணம் நபிமார்களைவிட ரஸூல்மார்கள் சிறப்பானவர்கள். ஏனெனில் நபிமார்களுக்கு 'நுபுவத்' உடைய பதவிதான். ரிஸாலத்துடைய பதவி இல்லை.

ரஸூல்மார்களுக்கு "நுபுவ்வத்", "ரிஸாலத்" ஆகிய இரு பதவிகளும் இருக்கின்றன. ரஸூல்மார்களிலும் "உலுஸ் அஸ்மிகள்" சிறப்புக்குரியவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள், இப்றாஹிம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), நுஹ் (அலை) ஆகிய 05 பேர்களுமே உலுஸ் அஸ்மிகளாவார்கள். இந்த ஐவரிடத்திலும் "நுபுவ்வத் ரிஸலாத், அஸ்ம்" ஆகிய 3 பதவிகள் இருக்கின்றன. இவர்கள் அனைவருக்கும் மத்தியில் எமது தூதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மாபெரும் சிறப்புக்களையும் அந்தஸ்துகளையும் அடைந்த தலைவராகத் திகழ்கின்றார்கள் என்பதைக் கட்டாயமாக ஒவ்வொரு முஸ்லிமும் தெரிந்த கொள்வது கட்டாயமாகும்.

உண்மை விசுவாசிகளே!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்புக்கு எல்லையே இல்லை. எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி இரவு, பகலாக மறுமை நாள் வரைக்கும் எழுதினாலும். பேசினாலும், பாடினாலும் நாயகத்தின் சிறப்புக்களுக்கு முடிவு காணமுடியாது.




கடவுள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தாமல் வேறு எப்படி எல்லாம் புகழ முடியுமோ அப்படி புகழ இஸ்லாமிய ஷரியஅத் அனுமதி வழங்கியுள்ளது. எனவே எமது ஏகத்தலைவர் உத்த நபி

களாரின் சிறப்புகள். பெற்றே
ஏனைய மனிதர்கள் அனைவ
ஸல்லல்லாஹு அலைஹி வ
உள்ளத்தால் நேசிக்கும் வரை
விசுவாசியாக முடியாது (புகா

நாயகத்தின் சிறப்புக்களை
குர்ஆன் ஷரீபில் அல்லாஹ்
நபிஸல்லல்லாஹு அலைஹி வ
மீது 'ஸலவாத்' என்னும்
கொண்டு இருப்பதுடன், விசுவா
நாயகத்தின் மீது ஸலவாத் செ
கட்டளையிட்டுள்ளான் (அஹ்

ஏழு வானங்களையும் (ஸி
வையும், தாண்டிச் சென்று இரு
வனைக்காணும் பாக்கியத்தை
இரவில் எமது நாயகம் பெற்
(முஸ்லிம்) அல்லாஹுத்தால
தூண்களில் எமது தூதரின்
டுள்ளது. (முஸ்தத்ரக்) அல்லா
நாமம் கூறும் இடங்களில் தன
திருநாமத்தைச் சேர்த்தே கூற
லும், இகா மத்திலும் தொழு
அத்தஹியாத்திலும் (நபிகள் ந

எல்லோருக்கும் இனிய மீலாத்
சிறப்பு நாள் நல்வாழ்த்துக்கள்

**MUTITIMBER DEALERS**
**CITY TIMBER DEALERS**
(உள்நாட்டு வெளிநாட்டு மரவகைகள்)

Importers malaysian Sawn Timber and Local Timber.

No.117, Navalar Road, (Five Junction, Jaffna)
T.P: 0772612453, 0773866173, 1215100191
E-mail: rifnazmulti@yahoo.com
(C/458)

எமது இனிய மீலாத் நல்வாழ்த்துக்கள்

**City Electronics**

all kinds at Electrical Item, CD's, Cassette, watch, Gift Items, etc...., etc......

No.34, Jumma mosque Lane, Jaffna.
T.P: 0215670375, Fax: 0212224097
(C/457)

அனைவருக்கும் எம் இனிய மீலாத் நல்வாழ்த்துக்கள்

**Safanas Denim Selection**

உங்கள் Denim தெரிவுகளைச் சிறந்த முறையில் பெற்றிட நாடுங்கள்.

No. 30/53, Grand Bazaar, Jaffna.
T.P: 0783254773, 0777765585
(C/456)

அனைவருக்கும் மீலாத் நல்வாழ்த்துக்கள்

நங்கையர்களுக்கான அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

**பாத்திமாஸ் ரெக்ஸ்ரைல்**

171, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/444)

மீலாத்தின் நல்வாழ்த்துக்கள்

**சியானாஸ் ரெயிலறிங் அன் ரெக்ஸ்ரைல்ஸ்**

ஆண்களுக்கான றெடிமேற் ஆடைகள், சூட் வகைகளை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/443)

VMT மீலாத் நல்வாழ்த்துக்கள்

**VAPPA MULTI TRADERS**

★ மிட்சு உற்பத்திப் பொருட்களின் முன்னோடி வியாபாரம்.
★ வியாபாரிகளுக்கு விசேட கழிவு

Mitshu electrical and Ceramics Home Appliance

32, Jummah Mosque Lane, Jaffna.
T.P: 0778099083, 0771902491
(C/445)

அனைவருக்கும் மீலாத்
நல்வாழ்த்துக்
அனைத்து வகையா
வகைகளை மொத்
சில்லறையாகவும் பெ
நாடவேண்டிய ஒ
கிங் மொபைல்
பெரியகடை
யாழ்ப்பாண
(C/446)

எல்லோருக்கும் மீலாத் நல்வாழ்த்துக்கள்

**டிப்ளோ அஸ்பான் ரெயிலரிங் & ரெக்ஸ்ரைல்ஸ்**

Specialist in Wedding Suits, Urgent Suit in 6 Hours.

இல.09, பெரிய கடைவீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 5686605, 0777447293
(C/455)

மீலாத் நல்வாழ்த்துக்கள்

**S.S.A.TRADING CO**

General Hardware & Brassware Merchants

243, (101) K.K.S. Road, Jaffna.
(C/465)

அனைவருக்கும் இனிய மீலாத் சிறப்பு நல்வாழ்த்துக்கள்


**ஜ'வல் பிளாசா நகை மாளிகை**

கிளிநொச்சி நகரில் கோலாகலமான திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை 18ஆம் திகதி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்: அப்துல் கபூர் நஸ்ருன்.
T.P: 021 2285438
(C/462)

அனைவருக்கும் இனிய
நல்வாழ்த்துக்
60 Year
யாழ்ப்பாணம் ஐந்து
பிளவ்ஸ் CREA
FIVE JUNCTION, JAFF
COOLS - HOTS -
தொடர்புகளுக்கு:
M.L.Lafir
0775976619







## மீலாத் நபி சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி



சர்வலோகங்களையும் படைத்து பரிபாலித்து ஆட்சி செய்யும் ஏக வல்ல இறைவன் மானிட இனத்திற்கு வழிகாட்ட மனிதன் தோன்றிய காலம்முதல் தூதர்களை அனுப்பியுள்ளான்.

இந்தத் தொடரைப் பூர்த்தி செய்ய இறுதித் தூதராக இவ்வுலகிற்கு இறைவனால் அனுப்பப்பட்ட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்த நாளில் அவரது போதனை, வாழ்க்கை வழிமுறையை உலகிற்கு ஞாபகமூட்ட, மீட்டிப்பார்க்க வெளியிடும் விசேட மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தினமுரசு வெளியீடுகளின் நல்ல பணிகளுக்கும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.எம். முபாரக்,**
**அதிபர், ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

**மலரமைப்பு-எம்.எல்.லாபீர்**

## பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்



அகிலத்துக்கோர் அருட்கொடையாக வந்துதித்து அன்பையும், பண்பையும், நல் அறத்தையும் போதித்த அண்ணல் எம் பெருமான் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் 'மீலாத் சிறப்பு மலருக்கு' வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே. அல்ஹம்துலில்லாஹ்!

அன்றைய அராபிய தேசத்தில் அறியாமை ஆட்சி செய்த காலத்தில் அஞ்ஞான இருள்போக்க அருள்மறை அல்குர்ஆனை இவ் அகிலத்துக்கு ஈந்தளித்து 'இஸ்லாம்' எனும் இனிய மார்க்கத்தை இவ்வுலகில் நிலைபெறச் செய்து, மாநிலத்தில் மாபெரும் மாற்றம் ஒன்றை மாநபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திக் காட்டினார்கள். அழகிய முன் மாதிரிகளை அவர்கள் போதித்ததோடு மாத்திரம் நின்றுவிடாது, அவற்றைத் தமது அன்றாட வாழ்வியலில் உள்வாங்கி வாழ்ந்தும காட்டினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட அழகிய முன்மாதிரிகள் தான் போருக்குப் பின்னரான இன்றைய நம் இலங்கை தேசத்தைப் பண்பாட்டு, ஒழுக்க ரீதியில் கட்டியெழுப்ப மிகவும் அவசியமானதாக உள்ளது. குறிப்பாக நபியவர்கள் போதித்த இனங்களுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு போன்ற பண்புகள் பல்லின மக்கள் வாழும் நம் தேசத்துக்கான இன்றைய தேவையாக உள்ளது. எனவே, 'மீலாதுந் - நபி' விழாவை வெறுமனே கொண்டாடுவதோடு மட்டும் நின்றுவிடாது, அண்ணலாரின் அழகிய முன்மாதிரிகளை நம் அன்றாட வாழ்விலும் எடுத்து நடந்து அமைதியும், சுபீட்சமும் நிறைந்த தேசமாக நம் இலங்கைத் திருநாட்டைக் கட்டியெழுப்ப இன்றைய தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம். அனைவருக்கும் மீலாத்தின வாழ்த்துக்கள்!

**எம்.எல்.லாபீர், (தலைவர், பெரிய முஹிதீன் ஜும்மாப்பள்ளி)**

...பெற்றோர், பிள்ளைகள், ...னைவரையும் விட நாயகம் ...ஹி வஸல்லம் அவர்களை ... வரை எந்த மனிதனும் ... (புகாரி முஸ்லிம்)

...புக்களைப் பற்றி புனித ...லாஹ்வும், மலக்குகளும் ...லஹி வஸல்லம் அவர்கள் ...லும் அருளைப் புரிந்து ... விசுவாசிகளே, நீங்களும் ...யாத் சொல்லுங்கள் என்று ... (அஹ்ஸாப் 56)

...யும் (ஸித்ரதுல் முந்தஹா ... இரு கண்களாலும் இறை ...பத்தை மி'.றாஜ் உடைய ... பெற்றார்கள் (புஹாரி, ...'த்தால... ...ின் அர்ஷின் ...ரின் ... எழுதப்பட் ... அல்லாஹ் அவனது திரு...ில் தனது ஹபீப்வுடைய ...த கூறுகின்றான் பாங்கி... தொழுகையிலும் கடைசி ...பிகள் நாயகத்தின்) பெயரைக் கூறுவது கட்டாயக் கடமையாக்கப் பட்டுள்ளது. இவைகளில் நாயகத்தின் பெயர் கூறாவிட்டால் பாங்கும். இகாமத்தும், தொழுகையும் அங்கீகரிக்கப்படமாட்டாது. நபிநாயகம் அவர்கள் மீது அன்பு வைத்த காரணத்தால் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியிலிருந்த மரக்குற்றி ஒன்றும் சுவர்க்கம் செல்லுகின்றது. மிம்பர் தயாராகமுன் இம் மரக்குற்றியிலிருந்துதான் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா பிரசங்கம் செய்தார்கள்.

(துஹ்பதுல் முரீத், ஹயாதுல் இஸ்லாம்)

ஒரு தடவை ஹுதைபியாவில் தண்ணீர் இல்லாத போது பெருமானாரின் விரல்களுக்கிடையில் இருந்து தண்ணீர் பெருக்கெடுத்தது. அன்று 1400 ஸஹாபாக்கள் அந்நீரை உபயோகித்தார்கள். அந்நீர் 1,00,000 பேருக்கும் இந்நீர் போதுமானதாக இருந்தது. சுவர்க்கத்தில் (ஹவ்லுல் கௌஸர்) நீரை விட அந்தஸ்தில் உயர்ந்ததாகும். பூமான் நபியின் புகழுக்கு முடிவே இல்லை.

A.W. Naswardeen (AL Hassari)

**மௌலவி புதிய மொஹிதீன் ஜும்மாபள்ளி, யாழ்ப்பாணம்.**

அனைவருக்கும் இனிய மீலாத் சிறப்பு நாள் நல்வாழ்த்துக்கள்

**S.M.MEERAN SAHIB TRANSPORTS**

**Jaffna to Colombo, Colombo to Jaffna**

**Jaffna:** 117, Manipay Road, (Five Junction) T.P: 0774895797

**Colombo:** 84, 1st Mosque Lane, Colombo 12. T.P: 0777362749

(C/454)

யாவருக்கும் மீலாத் நல்வாழ்த்துக்கள்

**Barakath Paper Trading Company**

School Items, Fancy Items, Stationery, Specialist in Exercise Books, Papers, Boards, Printing Inks & Boss Products

**388, Hospital Road, Jaffna.** **T.P: 0212222409, 0212222909.**

(C/453)

அனைவருக்கும் இனிய மீலாத் நல்வாழ்த்துக்கள்



**நுஹா கேட்டின் பெஷன்**

வீட்டுக்கேட்டின், மேடைக்கேட்டின், ஹோட்டல், வான், பஸ் இவைகளுக்குத் தேவையான கேட்டின் வகைகளும், சோபா செட் மேக்கர் பழையதும் திருத்திக் கொடுக்கப்படும்.

**Nuha Curtain Fashion,** 27/01, Jummah Mosque Lane, Jaffna.

T.P: 0777606262

(C/452)

...லாத் சிறப்பு தின ...துக்கள்



...கையான போன் ...மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள ... ஒரே இடம்

**...ல் போன் சொப்**

**...கடை வீதி, ...ப்பாணம்.**

மீலாத் நல்வாழ்த்துக்கள்

நவீன மய ஆடைகள், திருமணப் பட்டுப் புடைவைகள், நங்கையருக்கான ஜவுளிகள், றெடிமேற் ஆடைகள், சல்வார்கள் அனைத்திற்கும் ஒரே இடம்.



**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்**

**இல.10,11, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.**

(C/449)

மீலாத்தின் சிறப்பு நல்வாழ்த்துக்கள்

யாழ்.நகரில் என்றும் உயர்ந்த நாமத்தைக் கொண்டு இயங்கும்

**றஹ்மான் ஹொட்டல்**

சிக்கன் புரியாணி, மட்டன் புரியாணி, பிறைட்றைஸ், கொத்து வகைகள், சூப் வகைகள், நீங்கள் விரும்பும் பூரி, சப்பாத்தி வகைகள் என்பவற்றை ருசித்து மகிழ்ந்திட



**கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(C/450)

மீலாத் தின நல்வாழ்த்துக்கள்



அனைத்து வகையான மின் சாதனங்களையும், மின் உபகரணங்களையும் வீட்டு மின் இணைப்பிற்கான மின் வயறிங் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

**BRIGHT ELECTRICAL**

**No, E/1, Stanley Road, Jaffna.** T.P: 021-5670145, 0779295699

(C/448)

...இனிய மீலாத் சிறப்பு ...த்துக்கள்

...ம் ஐந்து சந்தியில் மீண்டும்....

**...REAM HOUSE**

...ON, JAFFNA

**...TS - SWEETS.**

**...க்கு:**

**...r**

**...19**



(C/460)

மீலாத் நல்வாழ்த்துக்கள்

**சிஹான் பென்ஸி ஹவுஸ்**

அனைத்து வகையான பென்ஸி பொருட்களினையும் மலிவான விலையில் தரமானதாகப் பெற்றிட நாடுங்கள்.



**உரிமையாளர்: பி.எஸ்.எம்.சரபுல் அனாம்**

**T.P:0776590632**

**374, அம்பாள் குளம், கிளிநொச்சி.**

(C/464)

அனைவருக்கும் இனிய மீலாத் நல்வாழ்த்துக்கள்

**ஜெஸீமாஸ்**

***JAZEEMAS***

**All types of Aluminium extrusions, Plywood, MDF Boards, Power Tools, Multilac Paints, Pantry fitting & Interiors Accessories.**

No.306, K.K.S.Road, Jaffna. 021 222 1544

Branch: No.3,4, Karadippoku Junction, Kilinochchi.

(C/461)

அனைவருக்கும் இனிய மீலாத் சிறப்புநாள் நல்வாழ்த்துக்கள்

**ஷனா ரெஸ்ரோறன்ட்**

உங்கள் நாவுக்கு விருப்பம்போல சைவ, அசைவ உணவுகள், புரியாணி, பிறைற்றைஸ், கொத்து ரொட்டி, வடடிலப்பம் போன்ற பல விதமான உணவு வகைகளை ரசித்து, ருசித்து உண்டு மகிழ நீங்கள்நாடவேண்டிய ஒரேஇடம்

**SANA Restaurant,**
**No.238, Kasthuriar Road,**
**Jaffna. T.P:0775292739, 0214921702**

(C/463)

# சூடானில் இடம்பெற்ற கருத்துக்கணிப்பு

# இலங்கைக்கு தேவையே இல்லையாம்

## பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க



(கொழும்பு)

பிரிவினை தொடர்பாக சூடானில் நடத்தப்பட்டது போன்று இலங்கையிலும் கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சூடான் நிலைமையும் இலங்கை நிலைமையும் வித்தியாசமானவை என்றும் இங்கு அத்தகைய கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்றும் கூறியுள்ளார் இலங்கையின் முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளரும்,ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க.

சூடானில் இருந்து தென் சூடான் பிரிந்து செல்வதற்கு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது போன்று இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு இலங்கை அரசை ஐ.நா இணங்க வைக்க வேண்டும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள், அனைத்துலக உதவி நிறுவனங்கள் சிலவும் வலியுறுத்தி வருகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க, இரு நாடுகளினதும் வரலாற்றுப் பின்னணியும், அரசியல் கோட்பாடுகளும் வித்தியாசமானவை. சூடானில் நிலைமை முற்றிலும் வித்தியாசமானது.

அங்கு சில பிரதேசங்கள் சூடானிய அரசாங்கத்தின் நிர்வாகத்திலும் இல்லை - அதற்கான விநியோகங்களும் இடம்பெறுவதில்லை.

ஆனால் இலங்கையில் நிலைமை அப்படியில்லை.

மோதல்கள் இடம்பெற்ற சூழலில் கூட எல்லா மாகாணங்களுக்கும் அரசாங்கத்தின் சேவைகள் வழங்கப்பட்டன.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் இருந்த போதும் கல்வி,சுகாதாரம் என்று அடிப்படை சேவைகள் அனைத்தையும் அரசாங்கமே வழங்கியது.

இந்தப் பகுதிகளில் உள்ள அரச நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் அரசாங்கமே ஊதியம் வழங்கியது.

அவர்கள் எப்போதும் அரசுடன் தொடர்பில் இருந்தனர்.

ஆனால் சூடானில் அத்தகைய நிலை இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# 50 ஆயிரம் வீடுகளை அமைக்க உடன்பாடு கைச்சாத்திடவில்லை

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்குப் பகுதிகளில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்தியா முன்வந்த போதிலும் அது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு இன்னமும் கைச்சாத்திடப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு,கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்தியா முன்வந்தது.

இந்திய அரசு நிறுவனமான Hindustan Prefab Ltd நிறுவனத்துடன் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றை இந்திய அதிகாரிகள் செய்துள்ளனர்.

அத்துடன் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.எம்.கிருஸ்ணா இந்த வீடுகளை அமைப்பதற்கான அடிக்கற்களையும் நாட்டியிருந்தார்.

முன்னோடியாக 1000 வீடுகளை அமைப்பதற்கான காணிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இதுதொடர்பாக இன்னமும் இலங்கையுடன் இந்தியா புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விரைவில் இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்று கூறப்படுகின்ற போதும் திட்டவட்டமான காலம் அறிவிக்கப்படவில்லை.

இதன்காரணமாக வீடமைப்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# 676 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு விடுதலை அல்லது புனர்வாழ்வு அளிப்பு

(கொழும்பு)

படையினரின் தடுப்பு முகாம்களில் உள்ள 676 முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலை செய்வதற்கு அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்ப சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம்,அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களையே விடுதலை செய்யுமாறு அல்லது புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் பூசா,ஓமந்தை தடுப்பு முகாம்களுக்குச் சென்ற சவீந்திர பெர்னாண்டோ தலைமையிலான குழு நடத்திய விசாரணைகளை அடுத்தே இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சட்டமா அதிபர் மொகான் பீரிஸ்,மூத்த அரச சட்டவாளர் செத்திய குணசேகர,குமாரரத்தினம்,திலான் ரத்னநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

தடுப்பு முகாம்களில் உள்ள 676 சந்தேக நபர்களையும் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்தக்குழு பரிந்துரை செய்துள்ளது.

ஓமந்தை தடுப்பு முகாமில் போரின் முடிவில் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பூசா தடுப்பு முகாமில் நீண்டகாலமாகவே சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஓமந்தை மற்றும் பூசா தடுப்பு முகாம்களில் உள்ள சந்தேக நபர்களில் அரைவாசிப் பேரின் வழக்குகளை இந்தக் குழு கவனத்துடன் ஆராய்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலை செய்யுமாறு அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்புமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 676 முன்னாள் போராளிகளில் 251 பேர் பூசா தடுப்புமுகாமில் உள்ளனர்.

ஏனைய 421 பேரும் ஓமந்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# சன்சி கப்பலில் சென்றவர்களில் 32பேர் புலிகளுடன் தொடர்பாம்

(கொழும்பு)

எம்.வி.சன்.சி கப்பலில் கடந்த ஓகஸ்ட் மாதம் கனடாவை வந்தடைந்த 402 இலங்கைத் தமிழர்களில் 32 பேர் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உடையவர்கள் என்று புலனாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பி-005 என்று புலனாய்வாளர்களால் பெயர் வழங்கப்பட்டுள்ளார்.

இவர் எம்.வி.சன்.சியில் மாலுமியாகச் சேர்க்கப்பட்டார். ஆயினும் இவர் இக்கப்பலுக்கு உரித்தான மாலுமி அல்லர்.

புலிகள் இயக்கத்திடம் எம்.வி.சன்.வேர்ட் என்று ஒரு கப்பல் இருந்தது. இக்கப்பலில் 1990 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாலுமியாக இவர் பணியாற்றியுள்ளார்.

இவர் ஏற்கனவே ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய போதும் அது நிராகரிக்கப்பட்டது. பிரிட்டனிலும் அரசியல் தஞ்சம் கோரி இருக்கின்றார். அதுவும் நிராகரிக்கப்பட்டது. நியூசிலாந்து செல்ல முயற்சித்தார். தோல்விதான். இவரது சகோதரர் ஒருவர் கனடாவில் உள்ளார். இந்நிலையில் கனடாவுக்குப் புறப்பட்டு வந்து திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாடலாசிரியரான அமைச்சர் விமல்



(கொழும்பு)

தேசிய வீடமைப்பு பொறியியல் நிர்மாண அமைச்சர் விமல் வீரவன்ஸ பாடல் ஆசிரியராக புதிய அவதாரம் எடுத்துள்ளார். இவர் ஜன சேவன வீடமைப்புத் திட்டத்தைப் புகழ்ந்து கன்னிப் பாடல் ஒன்றை எழுதியுள்ளார்.


இப்பாடலுக்கு இசை வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் இப்பாடல் அடங்கிய சி.டியின் பிரதி ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேரில் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இசையுடன் கூடிய இப்பாடலைக் கேட்டு மிகவும் புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

அது மட்டும் அல்லாமல் வீட்டுத் தோட்ட திட்டம் பற்றி பாடல் ஒன்றை யாத்துத் தர வேண்டும் என்று விமலுக்கு அன்புக் கட்டளை பிறப்பித்துள்ளார் ஜனாதிபதி.

# மனித உரிமைமீறல் குற்றச்சாட்டில் இந்தியா,கூட்டமைப்பு இணைந்துள்ளன

## என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் சாட்சியங்களின் பின்னணியில் இந்தியா உள்ளது. அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு சர்வதேச உதவிகள் இடைநிறுத்தப்படலாம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. இந்த நிலைக்கு முகம் கொடுக்க ஜெனிவா செல்லும் இலங்கைப் பிரதிநிதிகள் தயாராக இருக்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் எமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. நாட்டை துண்டாடும் அந்திய சக்திகளை தோற்கடிக்க வேண்டும் என்றும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர கூறுகையில், மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் இலங்கையைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபடுகின்றது. தற்போது இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைச் சுமத்த முயற்சிகள மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் செயற்பாடுகளின் பின்னணியில் இந்தியாவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவை மாநாட்டின் போது இலங்கை அரசாங்கத்தை அச்சுறுத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

இதற்கு அமைவாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தெற்கின் அரசியல்வாதிகளையும் மகா நாயக்க தேரர்களையும் சந்தித்து தனி நாட்டிற்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். இதற்கு மெருகூட்டும் வகையில் இந்தியா மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் காய்நகர்த்தல்களை முன்னெடுக்கின்றது. எனவே இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் ஜெனிவாவில் முன்னெடுக்க உள்ள நாட்டுக்கு எதிரான நடவடிக்கை குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

# பிணையில் விடுதலை

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவபண்டார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவ் ஒன்றியம் தெரிவித்தது.

சஞ்ஜீவ பண்டாரவுடன் றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கூறியது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் றுகுணு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு விட்டு திரும்பியபோதே,திஹகொட பொலிஸாரால் சஞ்ஜீவ பண்டார கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சஞ்ஜீவ பண்டார ஆயுதங்கள் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டிருந்தார். எனினும் றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் எதிர்க் குழுவினரால் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்துடன் அவரை தொடர்புபடுத்துவதற்கு முயற்சிக்கின்றனர் என மேற்படி ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# பயணிகளுக்கான படகுப்போக்குவரத்து ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யவேண்டும்

## கம்யூனிஸ்ட் பாண்டியன் தெரிவிப்பு

(சென்னை)

**இந்தியா-இலங்கை இடையே தொடங்கப்படவுள்ள பயணிகளுக்கான படகுப் போக்குவரத்து ஒப்பந்த விவகாரத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பதாகவும், அந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் கூறியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுப் போக்குவரத்துக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிகிறோம்.


அதில், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து தலைமன்னாருக்குப் படகுப் போக்குவரத்து உரிமங்கள் வழங்குவதற்கு உலகளாவிய ஒப்பந்தக் கோரல் விளம்பரம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், கால அவகாசம் கொடுத்து, அத்தகைய விளம்பரம் வெளியிடப்படவில்லை.

இது பற்றி தரைவழிப□ போக்குவரத்து அமைச்சர் வாசனுக்குக் கூடத் தெரியாது என்றே கேள்விப்படுகிறோம்.

தூத்துக்குடியிலிருந்து தலைமன்னார் செல்வதற்கு 12 மணி நேரம் ஆகும். இதர தமிழகத்துறைமுகங்களிலிருந்து குறைந்த நேரத்தில் செல்ல இயலும். எனவே, கப்பல் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் வாசன் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, விசாரித்து மறுபரிசீலனைக்கு உட்படுத்த உத்தரவிட வேண்டுகிறேன்.

இந்த முயற்சியில் நல்லெண்ணம் இல்லை. சூதாட்டம் இருப்பது வெளிப்படை. இதில் அரசியல்வாதிகளின் தலையீடும் உள்ளது. எனவே, முழு விசாரணை நடத்தி, பின்னர் முடிவெடுக்க வற்புறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார.

## காதலர் தினத்தில் நாய்களுக்குத் திருமணம்



(சென்னை)

காதலர் தினத்தை எதிர்த்து சென்னையில், இந்து முன்னணியினர் நேற்று முன்தினம் நாய்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

ஆண்டு தோறும் பெப்ரவரி,14ஆம் திகதி காதலர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. காதலர் தினத்தன்று பொது இடங்களில் சந்திக்கும் காதலர்கள் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். இது கலாசார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது எனக் கூறி, இந்து முன்னணியினர் பல்வேறு வகையில் காதலர் தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். நேற்று முன்தினம் காதலர் தினத்தை முன்னிட்டு, சென்னை புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த இந்து முன்னணியினர் 100க்கும் மேற்பட்டோர் கூடி, நாய்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். முன்னதாக, நாய்களை மணமகன், மணமகள் போல் குதிரை மேல் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். நாய்களுக்கு நடந்த திருமணத்தை பொதுமக்கள் வியப்புடன் பார்த்தனர்.

சென்னை மாவட்ட அமைப்பாளர் மனோகர் கூறியதாவது: நாங்கள் காதலை எதிர்க்கவில்லை. காதலர் தினம் என்ற பெயரில் பொது இடங்களில் காதலர்கள், அநாகரிகமாக நடந்து கொள்வதைத் தான் எதிர்க்கிறோம். பொது இடங்களில் அத்துமீறும் காதலர்கள் மீது பொலிசார் வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் வருங்காலங்களில் காதலர் தினக் கொண்டாட்டத்தின் மூலம் கலாசார சீரழிவு ஏற்படுவதைத் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு அவர் கூறினார்.




## பன்றிக்காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு

(ஜோத்பூர்)

ராஜஸ்தான் மாநிலத்தில் பன்றிக் காய்ச்சல் பரவியுள்ளதனால் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 12 பேர் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

2009ஆம் ஆண்டு உலகம் முழுவதும் பன்றிக் காய்ச்சல் பரவி பல்லாயிரக் கணக்கானோரைப் பலி கொண்டது. இந்தியாவிலும் இந்த நோய் தாக்கியது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். தமிழ்நாட்டிலும் உயிரிழப்பு ஏற்பட்டது. கடந்த ஆண்டும் பன்றிக் காய்ச்சல் தாக்கி ஏராளமானோர் உயிர் இழந்தனர். அதன் பின்னர் நோய் கட்டுக்குள் வந்தது. இப்போது மீண்டும் பன்றிக் காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரைச் சேர்ந்த ஒருவர் மர்மக் காய்ச்சல் தாக்கி அங்குள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இருந்தார். சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார். அவரது ரத்தத்தை பரிசோதித்தபோது பன்றிக் காய்ச்சல் தாக்கி இருந்தது தெரிந்தது. இதனால் உஷார் அடைந்த சுகாதார அதிகாரிகள் பன்றிக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஜோத்பூரில் பன்றிக் காய்ச்சல் அறிகுறி உள்ள 12 பேர் ரத்தங்களைப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

## கைது செய்யப்பட்ட ராசா மீது மேலும் இரண்டு வழக்குப்பதிவு

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ. ராசா மீது மேலும் இரண்டு பிரிவுகளில் சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டு முறைகேடு வழக்கில், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவை சி.பி.ஐ. அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.



ஆ.ராசா மீது சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கனவே ஊழல் தடுப்புச் சட்டப்பிரிவு உட்பட 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் ஆ.ராசா மீது மேலும் 2 பிரிவுகளில் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று முன்தினம் புதிய வழக்குகளைப் பதிவு செய்தனர்.

இந்திய தண்டனைச் சட்டம் 420 (ஏமாற்றுதல்) 468 (மோசடி) ஆகியவை ராசா மீதான புதிய வழக்குகளாகும். ராசாவிடம் இதுவரை 12 நாட்கள் தொடர்ச்சியாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி உள்ளனர். இந்த விசாரணையின் போது ஆ.ராசா முழுமையான ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்று சி.பி.ஐ. அதிகாரிகள் குற்றம்சாட்டி உள்ளனர்.

இதனால்தான் ராசா மீது மேலும் 2 புதிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ராசா மீது பதிவு செய்யப்பட்டுள்ள ஏமாற்றுதல், மோசடி வழக்குகள் மும்பை தொழில் அதிபர் பல்வா மீதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு உரிமத்துக்காக அவர்கள் ஆவணங்களைத் திருத்தி மோசடி செய்ததாக சி.பி.ஐ. கூறியுள்ளது.

ராசாவிடமும், பல்வாவிடமும் இந்த புதிய வழக்குகளின் அடிப்படையில் தற்போது விசாரணை நடந்து வருவதாக தெரிகிறது. ராசாவிடம் நடத்தப்படும் விசாரணை நாளை (17ஆம் திகதி) முடிகிறது. அன்று பிற்பகல் ராசா மீண்டும் சி.பி.ஐ. நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவார்.

## இயற்கையை எதிர்த்து வாழ்ந்தால் எம்மை, நாமே அழிக்க நேரிடும்

(சென்னை)

இயற்கையை எதிர்த்து வாழ்வதென்பது, எம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகுமென நடிகர் சிவகுமார் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:



ஒரு காலத்தில் இயற்கையோடு மனிதன் ஒன்றிணைந்து வாழ்ந்தான். இதனால் இயற்கை அவனைப்பாதிக்கவில்லை. தற்போது நாகரிகம் என்ற பெயரில் இயற்கைக்கு எதிராக மனிதனின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இயற்கையை எதிர்த்து வாழ்வது என்பது நம்மைநாமே அழித்துக் கொள்வதாகும். ஆலமரங்களில் விழுதுகளில் நாங்கள் ஊஞ்சல் ஆடுவோம். ஆடிப்பாடி வாழ்ந்த அந்த இளமைக் காலம் இனித் திரும்பி வராது. ஆனால் அந்த மரங்களை யாவது பார்த்து பழைய நினைவுகளை அசைபோடலாம் என்றால் தற்போது மரங்களைப் பார்ப்பதே அரிதாகிவிட்டது. இப்போது சாலைகள் விரிவாக்கம் என்ற பெயரில் அனைத்து மரங்களும் வெட்டப்பட்டு விட்டன. அந்தக் காலகட்டங்களில் கோவையில் எப்போதும் மழை தூறிக்கொண்டே இருக்கும்.

ஆனால் இப்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துவிட்டது. இதற்குக் காரணம் மரங்களை வெட்டியதே ஆகும். எனவே மாணவ மாணவிகள் அனைவரும் மரங்களை வளர்க்க வேண்டும்.

அதே போல் உடல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும். உடல் உறுப்புகளைப் பாதுகாக்க யோகா சிறந்த பயிற்சியாகும். எனவே அனைவரும் யோகா பயிற்சி செய்ய வேண்டும் என்றார்.

## மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பு ஒத்திவைப்பு

(சென்னை)

கச்சதீவு ஒப்பந்த உரிமைகளை அனுபவிப்பதற்காக தமிழக மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் தகுந்த பாதுகாப்பை வழங்க உத்தரவிடவேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளிவைத்தது. சென்னை உயர் நீதிமன்றம் பழைய பல்லாவரத்தைச் சேர்ந்த பீட்டர் ராயன் தாக்கல் செய்த பொதுநலன் மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழக அரசின் துணைச் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற நிலையில், தற்போது மீனவர் நலன் என்ற அமைப்பின் தலைவராக செயற்பட்டு வருகிறேன். இந்திய பிரதமர் மற்றும் இலங்கைப் பிரதமர் ஆகியோர் இடையே 1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட உரிமைகளை இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையே உள்ள பாரம்பரிய கடல்பகுதியில் இலங்கை கடற்படையினர் அனுபவித்து வருகின்றனர். ஆனால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து அவர்களால் கொலை செய்யப்படுகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி கச்சதீவில் 2 நாட்டு மீனவர்களும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிமை அளிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படாத கடல் எல்லை குறித்த ஒப்பந்தம் 23.3.76 அன்று 2 நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் கேவல்சிங், 23.3.76 அன்று இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அதில், தமிழக மீனவர்கள் மீன் பிடித்து வந்த பாரம்பரியமான கடல் பகுதியிலும், இலங்கை அரசின் பொருளாதார மண்டலப் பகுதியிலும் மீன்பிடிக்க மாட்டார்கள். அதுபோல் இலங்கை மீனவர்களும், இந்திய பொருளாதார மண்டல பகுதியில் உரிய அனுமதி இல்லாமல் வரக்கூடாது என்று கூறப்பட்டு உள்ளது. இது ஒரு அதிகாரியின் அறிவுறுத்தல் கடிதம்தான். ஆனால் அதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு, அதை செயல்படுத்தும் விதத்தில் 1974 மற்றும் 1976ஆம் ஆண்டு ஒப்பந்தங்களை நிறைவேற்றவில்லை. மேலும் அந்த கடிதத்தில் உள்ளபடி கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள வெட்ஜ் பாங் பகுதி வரைக்கும் இலங்கை மீனவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன் மூலம் இந்திய பொருளாதார மண்டலத்தில் உள்ள பொக்கிசங்கள் அனைத்தும் அவர்களால் சுரண்டப்படுகின்றன. மேலும் தமிழக மீனவர்களும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப் படுகின்றனர். இலங்கை கடற்படையினரால் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த மனுவை தலைமை நீதிபதி எம். இக்பால், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் விசாரித்தனர். மனு மீதான தீர்ப்பைத் தள்ளி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# அதிகரிக்கும் வன்செயல்களால் ஆப்கானில் சிறுவர்கள் பாதிப்பு



(ஜெனிவா)

ஆப்கானில் அதிகரித்துவரும் மோதல்களால் சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஆப்கானில் உதவியாளர் உட்பட பல்வேறு ஆயுதக்குழுவினராலும் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினாலும் சிறுவர்களின் உயிரிழப்பு, காயம் என்பன அதிகளவில் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடத்தில் மட்டும் 1800 சிறுவர்கள் கொல்லப்பட்டோ அல்லது காயமடைந்தோ உள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் அரையாண்டு காலப்பகுதியில் சிறுவர்களின் உயிரிழப்பு 155 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இது முன்னைய 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகமென செயலாளர் பான்கீமூன் தெரிவித்தார். தற்கொலைத் தாக்குதல், வீதியோரக் குண்டு வெடிப்பு, றொக்கட் தாக்குதல்கள் போன்றவையும் ஆயுதக் குழுக்கள், சிறுவர்களைத் தமது நடவடிக்கைக்காகப் பயன்படுத்துவதுமே இந்த இழப்பிற்குக் காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் மட்டும் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 2400 மக்கள் கொல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எட்டாவது உலக அதிசயம் நியூஸிலாந்தில் கண்டுபிடிப்பு

(ஆக்லாந்து)

இந்தியாவின் தாஜ்மகால், சீனாவின் பெருஞ்சுவர் உள்ளிட்ட 7 உலக அதிசயங்கள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது 8 ஆவது உலக அதிசயமாக நியூசிலாந்தில் உள்ள ரொடோமாகானா ஏரிக்குள் மூழ்கிக் கிடக்கும் மொட்டை மாடிக் கட்டிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவை 60 மீட்டர் ஆழத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது. இவை 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. எரிமலைகளின் சீற்றத்தால் கடந்த 125 ஆண்டுகளுக்கு முன்பு ஏரிக்குள் மூழ்கியி ருக்கலாம் என கிவி மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கும் மொட்டை மாடிகள், இளஞ்சிவப்பு மற்றும் வெளளை நிறத்தில் ராட்சத திருமண 'கேக்' வடிவத்தில் உள்ளது. அது கடந்த 1886 ஆம் ஆண்டு ஏரிக்குள் மூழ்கியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த ஏரி நியூசிலாந்தின் ஜியோ தெர்மல் பகுதியில் உள்ள வடக்குத் தீவில் அமைந்துள்ளது. இதைத் தண்ணீருக்குள் மூழ்கிப் பார்க்க அதிநவீன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் தங்கள் நாட்டின் சுற்றுலா வளர்ச்சி அதிகரிக்கும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

# எகிப்திய தலைவர்களின் சொத்துக்களை பிரான்ஸ் முடக்க வேண்டுமெனக் கோரிக்கை

(கெய்ரோ)

எகிப்திய அரசியல் தலைவர்களின் சொத்துக்களைப் பிரான்ஸ் முடக்க வேண்டுமென எகிப்தின் புதிய இடைக்கால நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரான்ஸில் உள்ள எகிப்து தலைவர்களின் சொத்துக்கள் முடக்கம் குறித்துப் புதிய நிர்வாகம் உறுதியாக உள்ளது. சொத்து முடக்கத்தில் முபாரக்கின் சொத்து விவரங்கள் குறித்துக் குறிப்பிடவில்லை. இது குறித்து பிரான்ஸ் வெளியுறவு துறை செய்தித் தொடர்பாளர் பெர்னார்ட் வலரோ கூறுகையில் -

எகிப்து நிர்வாகத்தினருக்குத் தாங்கள் ஒத்துழைப்பு அளிப்போம் என்றார். ஐரோப்பிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் கதரின் ஆஷ்டன் தெரிவித்த கருத்தில் -

முபாரக் சொத்து முடக்கம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். அதனைப் பிரதிபலிக்கும் வகையில் பிரான்ஸ் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் பெர்னார்ட் வல்ரோ கூறியுள்ளார்.

# ஆப்கான், பாகிஸ்தான் நாடுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் நியமனம்

(வொஷிங்டன்)


பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானின் தூதுவராக ஓய்வு பெற்ற இராஜதந்திரியான மார்க குறோஸ்மான் என்பவரை அமெரிக்கா அறிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இரண்டு நாடுகளின் அமெரிக்கத் தூதுவராக இருநத றிச்சட் கோல்புறூக் கடந்த டிசம்பர் மாதம் உயிரிழந்ததை அடுத்தே இவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது நியமனம் தொடர்பான அறிவிப்பை வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் இவ் வாரத்தில் அறிவிக்கவுள்ளார்.

புதிதாக நியமிக்கப்படவுள்ள மார்க் குறோஸ்மான் மூன்று தசாப்தகாலமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பணியாற்றியவராவார்.


அத்துடன் துருக்கியின் தூதுவராகவும், ஐரோப்பாவிற்கான உதவி இராஜாங்கச் செயலராகவும் பணியாற்றியவராவார்.



அத்துடன், அமெரிக்கத் துணையுடன் நடந்த கொசோவோ போர் மற்றும் அமெரிக்காவில் 2009 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலை அடுத்து பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலுக்கு சர்வதேச ரீதியிலான ஆதரவைப் பெற்றுக் கொடுத்ததில் முக்கிய இடத்தை வகித்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.




# ஈரானில் இடம்பெறும் ஆர்ப்பாட்டம் அமெரிக்கா பூரண ஆதரவு அளிப்பு



(தெஹ்ரான்)

ஈரானில் எதிர்க்கட்சிகளினால் நடத்தப்பட்டு வரும் ஆர்பபாட்டங்களுக்கு பூரண ஆதரவளிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் ஆயிரக் கணக்கானவர்கள் போராட்டங்களை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. எகிப்து மக்களைப் போன்றே ஈரான் மக்களும் போராட்டங்களை நடத்துவதற்கு உரிமையுடையவர்கள் என அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

மத்திய தெஹ்ரானில் நடைபெற்ற போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரை அந் நாட்டுப் பொலிஸார் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அந் நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுததப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஈரான் அரசாங்கம் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடக் கூடாது என கிளின்ரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது சொந்த நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.




உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி
எமக்கு அனுப்பி வையுங்கள்.
தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் கையொப்பம்

# நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் படையினரின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பாதுகாப்புப் படையினரின் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் யாழ்ப்பாண மக்களுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்படுத்துவதுடன் மேலும் உறவினை வலுப்படுத்தும் முகமாக பாதுகாப்புப் படை தலைமையகம் மற்றும் யாழ்ப்பாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டு வருவதாக இப்போட்டிகளின் ஒருங்கிணைப்பாளரும், தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளருமான ந. யோகராஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகிய இப்போட்டிகள் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தலைமையில் நடைபெறுகிறது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகிய முதற்போட்டியில் நவசக்தி அணியும் யாழ்.




இராணுவ எட்டாவது பிரிவினரும் மோதிக் கொண்டனர். இதில் நவசக்தி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் பொமேர்ஸ் அணியும் செவன் பிஷ் அணியும் மோதிக் கொண்டன. இதில் செவன் பிஷ் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்காததால் பொமேர்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் கொமாண்டோப் படையின் ஐந்தாவது பிரிவு அணிக்கும் சென் சேவியர் அணிக்கும் இடையில் போட்டி இடம்பெற்றது. இதில் அபாரமாக ஆடிய சென்சேவியர் 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து கிறீன்பீல்ட் அணிக்கும் சென் ஜேம்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த போட்டி, கிறீன்பீல்ட் அணி குறித்த நேரத்திற்கு சமூகமளிக்காததன் காரணமாக சென் ஜேம்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். கிறீன் கிங்ஸ் அணியும் பொற்பதி அணியும் மோதிக் கொண்டன. இதில் பொற்பதி அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சிவானந்தா அணியும் காங்கேசன் துறைப் படைப்பிரிவின் ஐந்தாவது பிரிவு அணியும் மோதிக் கொண்டன. இதில் சிவானந்த அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (மி)


## பீற்றர்சன் மறுப்பு



உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்குப் பின்னர் ஓய்வுபெறப் போவதாக ஒருபோதும் கூறவில்லை என்று இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன் மறுத்துள்ளார். உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்குப் பின்னர் ஒருநாள் போட்டிகளில் ஓய்வுபெறப் போவதாகவும், அதே சமயம் டெஸ்ட் மற்றும் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடவுள்ளதாகவும் பீட்டர்சன் தெரிவித்ததாக செய்தி வெளியானது.

இந்த நிலையில் அதுபோன்ற கருத்துகள் எதையும் தான் தெரிவிக்கவில்லை என பீட்டர்சன் தனது டிவிட்டர் இணையத்தில் எழுதியுள்ளார். மேலும் அவ்வாறு கூறப்படுவதில் உண்மையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# வாய்ப்பு அதிகம்



(லண்டன்)

களத்தடுப்பில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதால், இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது என, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அனைத்து அணிகளுக்கும் சம அளவில் உள்ளது. இருப்பினும் களத்தடுப்பில் சிறப்பாக செயற்படும் அணிக்கு சற்றுக் கூடுதலாக வாய்ப்பு உள்ளது. சமீபகாலமாக இந்திய அணியின் களத்தடுப்பு சிறப்பாக உள்ளது. களத்தடுப்பில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதால், இம்முறை இந்திய அணிக்கு உலகக் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு சற்று அதிகமாக உள்ளது. களத்தடுப்பில் கண்ட இம்முன்னேற்றத்திற்கு, பயிற்சியாளர் கிறிஸ்டனின் பங்களிப்பு முக்கிய காரணம். டோனி, தலைவராக மட்டுமல்லாமல், துடுப்பாட்டம், விக்கெட் காப்பாளர் என அனைத்திலும் சிறப்பாக செயற்படுவது பலம். இவர், அணியில் உள்ள மற்ற இளம் வீரர்களுக்கு நல்ல உதாரணமாக விளங்குகிறார் என்றார்.

# குறைகூறிப் பயனில்லை



ஆடுகளத்தைப் பற்றிக் குறை சொல்வதற்கு ஒன்றும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இந்திய துணைக் கண்டத்தில் உள்ள ஆடுகளங்கள் இப்படித்தான் இருக்கும் என்பதைப் அவுஸ்ரேலிய அணியினர் புரிந்து கொள்ள வேண்டும். சுழற்பந்து வீரர்களுக்கு ஏற்ற வகையில் ஆடுகளம் இருந்தது. இவ்வாறு அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவோ தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அவுஸ்ரேலிய அணி உலக முழுவதும் விளையாடக்கூடியது. எந்த ஆடுகளத்திலும் விளையாடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்திய ஆடுகளங்கள் இந்தியப் பந்து வீச்சாளார்களுக்கு கடும் சவாலாக இருக்கும். பயிற்சி ஆட்டத்தில் டோனி சுழற்பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்தது ஆச்சரியம் அளிக்கவில்லை என்றார்.

# எங்களாலும் முடியும்



(சென்னை)

எங்களுடைய அணி பலம் வாய்ந்த அணி, அதனால் எங்களால் கிண்ணத்தை வெல்ல முடியும் என நியூசிலாந்து வீரர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து இவர்கள் கூறியதாவது:

ஸ்டைரிஸ்: உலகக் கிண்ணத்தை விட வேறு எதுவும் பெரிதல்ல. இதற்கு முன் இந்தியா வந்தபோது சிறப்பாகவே விளையாடியிருக்கிறோம். ஆனாலும் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சவால் அளிக்கும் வகையில் விளையாடுவோம்.

இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், எங்களின் இப்போதைய பயிற்சியாளருமான ஜோன் ரைட்டின் அனுபவம் எங்களுக்கு முக்கியமானது. அவருக்கு இந்தியாவில் நிறைய நண்பர்கள் உள்ளனர். குறிப்பாக ஆடுகள பராமரிப்பாளர்களை அவருக்குத் தெரியும். இங்குள்ள ஆடுகளங்கள் எங்களுக்கு ஏற்ற வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜோன் ரைட் கூறினார் என்றார்.

டெய்லர்: சமீபத்தில் விளையாடிய தொடர்களில் இருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளோம். கடந்த 6 மாதங்கள் எங்களுக்கு கடிமான காலமாக அமைந்து விட்டது. ஆனாலும் அதிலிருந்து நிறையக் கற்றுக்கொண்டுள்ளோம். இந்த முறை கிண்ணத்தை வெல்வதற்காகக் கடுமையாக உழைப்போம்.

காலிறுதிச்சுற்றில் நுழைந்துவிட்டால் அதன்பிறகு மூன்று ஆட்டங்களில் வெற்றி பெற்றால் கிண்ணத்தைக் கைப்பற்றிவிடலாம். என்னைப் பொறுத்தவரையில் உலகக் கிண்ணம் என்பது மிகப் பெரிய ஒன்று. கடந்த உலகக் கிண்ணத் தொடரில் காயம் காரணமாக விளையாட முடியாமல் போய்விட்டது என்றார்.

பிரன்டன் மக்குலம்: என்ன நடந்தாலும் சரி எப்படியாவது காலிறுதிச்சுற்றுக்குள் நுழைந்துவிட வேண்டும் என்பதே எங்களின் முதல் இலக்கு என்றார்.

## மரதனில் வென்றோர்

(நெல்லியடி)

முல்லைத்தீவு விஸ்வமடு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு அண்மையில் வித்தியாலய மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

ஆண்கள் பிரிவு: முதலாமிடம் ச. கிருஷாந்தன், இரண்டாமிடம் யுகசயந்தன், மூன்றாமிடம் த. சாந்தன்.

பெண்கள் பிரிவில்: முதலாமிடம் விஜயகுமாரி, இரண்டாமிடம் மேகலா ஜோதி, மூன்றாமிடம் திருமகள். (17)

## உலகக் கிண்ணப் பயிற்சிப்போட்டி


### சிம்பாப்வே எதிர் அயர்லாந்து

நாக்பூர் மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் துடுப்பாட்டம்
சிம்பாப்வே 244/8 (50 ஓவர்கள்)
அயர்லாந்து 245/6 (49.3 ஓவர்கள்)
4 விக்கெட்டுக்களால் அயர்லாந்து வெற்றி.



### கென்யா எதிர் நெதர்லாந்து

கொழும்பு மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி கென்யா : முதலில் துடுப்பாட்டம்
கென்யா 263/5 (50 ஓவர்கள்)
நெதர்லாந்து 264/8 (49.5 ஓவர்கள்)
2 விக்கெட்டுக்களால் நெதர்லாந்து வெற்றி.



## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# சாது மிரள்கிறதே...



சங்கக்கார சந்தோஷமாக இல்லை. இதற்கு உடனடிக் காரணம் பல்லேகல மைதானத்தில் நடைபெறத் திட்டமிட்டிருந்த பயிற்சி ஆட்டம் இடமாற்றம் பெற்றிருப்பது தான். முதல் சுற்றில் இலங்கை அணி சிம்பாப்வேயை இந்த மைதானத்தில் சந்திக்கவுள்ளது. எனவே, பல்லேகல மைதானத்தின் சாதக பாதகங்களை எடைபோடும் சந்தர்ப்பமாக அங்கு பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவது பயன்படும். புதிய மைதானமாக இருப்பதால் இந்த மைதானம் பற்றி வெளிநாட்டு அணிகள், தமக்குத் தெரியவில்லை என்றால் அதில் ஓர் உண்மை உண்டென்று கொள்ளலாம். ஆனால், உள்வீட்டுப் பிள்ளைகளுக்கே மைதானம் அந்நியப்பட்டு நிற்கிறதென்றால் யாருக்குத்தான் அதிருப்தியும் கோபமும் வராது? இதனைத் தான் சங்கக்கார வெளிப்படுத்துகிறார்.

**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

இதனை முழு அணியின் எண்ணமாகவும் ஏன் இலங்கை ரசிகர்களின் எண்ணமாகவும் கோபமாகவும் கொள்வதில் எந்தப் பிழையும் இல்லை.

இந்த விடயத்தில் இலங்கை கிரிக்கெட் சபைதான் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

புதிய மைதானங்கள் அமைத்து அதில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடாத்தும் எண்ணத்தை ஐ.சி.சி.க்கு வெளிப்படுத்தும்போதே நாங்கள் தயாராகும் தகுதியில் இருக்கிறோம் என்பது புரிந்திருக்கவேண்டும்.

'படாடோபம்' காட்டப் போய் இலங்கை அணியைப் பாதாளத்தில் தள்ளக்கூடாது இவர்கள்.

இங்கு சந்திக்கப் போவது சிம்பாப்வேயைத் தான். என்றாலும் உலகக் கிண்ணப் போட்டிகளில் எதுவும் இலகுவல்ல. சங்கக்காரவின் கோபம நியாயமானதே.

## உலகக் கிண்ணப் பயிற்சிப்போட்டி

### அவுஸ்ரேலிய எதிர் தென்னாபிரிக்கா



பெங்களூர் மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி அவுஸ்ரேலியா: முதலில் துடுப்பாட்டம்
ஆஸி. 217 (47.1 ஓவர்கள்)
தென்னாபிரிக்கா 218/3 (44.2 ஓவர்கள்) 7 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றி.

### பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்

மிர்பூர் மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி பாகிஸ்தான் : முதலில் துடுப்பாட்டம்
பாகிஸ்தான் 285/9 (50 ஓவர்கள்)
பங்களாதேஷ் 196 (41.4 ஓவர்கள்)
89 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி.

### இலங்கை எதிர் மே.தீவுகள்

கொழும்பு பிரேமதாச மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி மே.தீவுகள் : முதலில் துடுப்பாட்டம்
மே.தீவுகள் 281 (50 ஓவர்கள்)
இலங்கை 282/6 (47.3 ஓவர்கள்)
4 விக்கெட்டுக்களால் இலங்கை வெற்றி.

# ஹைகோர்ப் வழக்கை விசாரிப்பதற்கு மேல் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை

## பொன்சேகாவின் சட்டத்தரணி வாதாட்டம்



(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் அரசியலமைப்பின்படி ஒரு நீதிமன்றமாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்ட ஹைகோர்ப் வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றம் விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் கிடையாது என சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி வாதாடினார்.

அவுஸ்ரேலியாவிலுள்ள பிரிட்டிஷ் போர்னியோ டிபென்ஸ கம்பனி எனும் நிறுவனத்தின் முகவரென போலி ஆணவங்களை சமர்ப்பித்து இராணுவத்தில் பதிவு செய்து கொண்டு, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதன் மூலம் பொதுமக்கள் பணத்தை தவறாக கையாண்டதாக சரத் பொன்சேகாவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சுனில் ராஜபக்ஷவினால் விசாரிக்கப்பட்ட போது பொன்சேகாவின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்படி வாதத்தை முன்வைத்தார்.

சரத் பென்சேகா ஏற்கனவே இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். இரு வழக்குகளிலும் குற்றச்சாட்டுகள் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை என்ற நிலையில் மேல்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிப்பதற்கான நியாய ஆதிக்கம் இல்லை என சட்டத்தரணி சாலிய பீரிஸ் வாதாடினார்.

இதை ஆட்சேபித்த அரச தரப்பு சட்டத்தரணி தமித் தொட்டவத்த, இருவழக்குகளும் ஒரே மாதிரியாகத் தென்பட்டாலும் உண்மைத் தரவுகளின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். அடுத்த விசாரணைத் தினத்தில் தனது வாதத்தை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரதியை வழக்குத் தொடுநர்கள் அல்லது இராணுவத் தளபதி மேல் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடுமாறு பொன்சேகாவின் சட்டத்தரணி கோரினார்.

அதையடுத்து இவ்வழக்கை மார்ச் 9 ஆம் திகதிக்கு நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஒத்திவைத்தார். தனுன திலகரட்ன, ஹைகோர் லிமிடெட் பணிப்பாளர்களில் ஒருவரான வெலிங்டன் டி ஹோட்டம், சரத் பொன்சேகா ஆகியோர் மீது சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# புனர்வாழ்வு முகாம்களில் 352தீவிர புலிஉறுப்பினர்கள்

(கொழும்பு)

வவுனியா மற்றும் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 4000 புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் 352 பேர் தீவிர உறுப்பினர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு முகாம்களில் உள்ள முன்னாள் போராளிகள் ஏ.பி.சி என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள், முக்கிய பிரமுகர்களைப் படுகொலை செய்தவர்கள், குண்டுகள்,வெடிபொருட்கள் ஆயுதங்களைக் கொண்டு சென்றவர்கள்,இராணுவ முகாம்களின் மீது தாக்குதல் நடத்தியவர்கள்,கடற்படைப் படகுகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், பாதுகாப்புப் படையினரின் படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள், புலிகள் அமைப்பில் பிராந்தியத் தலைவர்களாக இருந்தவர்கள், தற்கொலைப் படை உறுப்பினர்கள் என்று 352 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் தனியாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை புனர்வாழ்வில் இருக்கும் மற்றொரு தொகுதி முன்னாள் போராளிகள் மீதான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த விசாரணைகளில் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு,தீவிரவாத முறியடிப்புப் பிரிவு,தேசிய புலனாய்வுப் பிரிவு,பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவு,ஆயுதப் படைகளின் புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாதீர்


(கொழும்பு)

அரசியல் நோக்கங்களுக்காக அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், அரச ஆதரவு நிகழ்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதனைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசன்னத்துடன் இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

பொது நிகழ்வுகளை நடாத்துவது குறித்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேர்தல் ஆணையாளர் வழிகாட்டி ஒன்றை அனுப்பிவைக்கத் தீர்மானித்



துள்ளார்.

அரசியல்வாதிகளின் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அரச ஆதரவு நிகழ்வுகள் சந்தர்ப்பமாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளில் அரசாங்க ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய காரணத்தினால் இடமாற்றங்கள் வழங்கப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களை வேட்பாளர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொடர்கிறது சவூதியில் கொடூரம்

## விலங்குப் பண்ணையில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் மீட்கப்பட்டார்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் ஒதுக்குப் புறமாக உள்ள விலங்குப் பண்ணை ஒன்றில் எஜமானர்களால் கட்டாய வேலைக்கு அமர்த்தப்பட்டு வந்த இலங்கைப் பணிப் பெண் ஒருவரை தூதரக அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

பாத்திமா அசீரா (வயது-43) என்பவர் வீட்டுப் பணிப் பெண் வேலைக்காக கடந்த செப்டெம்பர் மாதம் சவூதி வந்து சேர்ந்தார்.

ஆனால் வீட்டு வேலைகளுக்கு மேலதிகமாக விலங்குப் பண்ணை ஒன்றில் பணியாற்ற வேண்டும் என்று எஜமானர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இப்பண்ணையில் சுமார் நூற்றுக்கணக்கான வளர்ப்புப் பிராணிகள் உள்ளன. இவர் பயங்கரமான குளிருக்குள்ளும் பண்ணையில் மிருகங்களோடு இராப் பொழுது முழுவதையும் கழிக்க வேண்டி இருந்தது.

காலையில் 5.00 மணிக்கு பண்ணைக்கு செல்ல வேண்டும். விலங்குகளுக்கு வாகனம் ஒன்றில் இரை வரும். இந்த இரை முழுவதையும் தனி ஒருவராக வாகனத்தில் இருந்து இறக்க வேண்டும்.

விலங்குகளுக்கு இரை கொடுக்க வேண்டும். பண்ணையை துப்புரவு செய்ய வேண்டும். அதிகாலை 10.00 மணிக்குள் எஜமானரின் வீட்டுக்குச் செல்ல வேண்டும். இவை இவரின் நாளாந்த கடமைகளில் பண்ணை சார்ந்தவை.

அதன் பின் வீட்டில் சமைக்க வேண்டும். எஜமானர்களின் உடுப்புக்களைத் தோய்க்க வேண்டும். வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும். எஜமானர்களின் குழந்தைகளை பராமரிக்க வேண்டும். இவர் இருமலுடன் இரத்த வாந்தி எடுக்கத் தொடங்கி இருக்கின்றார்.

பண்ணையில் உள்ள மிருகங்கள் மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு இருக்கின்றது. அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கடந்த 30 நாட்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

கடும் குளிருக்கு மத்தியில் திறந்த பிரதேசம் ஒன்றில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தமையால் இவர் நோய் வாய்ப்பட நேர்ந்து இருக்கின்றது என்று வைத்தியர்கள் கூறி இருக்கின்றனர்.

இவரின் கைகள், கால்கள் குளிர்க் கொடுமையால் மரத்து விட்டன. சவூதியில் உள்ள இலங்கைத் தூதுரகத்தைச் சேர்ந்த தொழிலாளர் நலன் பேணும் அதிகாரி சுனில் விஜேசிங்க இப்பெண்ணை நேரில் சென்று வைத்தியசாலையில் பார்வை இட்டார்.

வீட்டுப் பணிப் பெண்ணாக வந்தவரை விலங்குப் பண்ணையில் வேலைக்கு அமர்த்தியமை தொழில் சட்டத்துக்கு முரணானது என வாதாடினர்.

நீண்ட பிரயத்தனத்துக்கு பின் வைத்தியசாலையில் இருந்து இப்பெண்ணை தூதரகம் பொறுப்பேற்று உள்ளது. ஆயினும் பெண்ணின் உடல் நிலை திருப்திகரமாக இல்லை.

இவர் தற்போது தலைநகர் ரியாத்துக்குக் கொண்டு வரப்பட்டு தூதரகத்தின் நேரடி மேற்பார்வையில் வைத்தியசாலை ஒன்றில் தொடர் சிகிச்சை பெறுகின்றார்.

# கடற்கொள்ளைகளைத் தடுப்பதற்கு விசேட நீதிமன்றம் அமைக்கமுடிவு

(கொழும்பு)

கடற்கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் இலங்கையில் விசேட நீதிமன்றமொன்று நிறுவப்படவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டு முக்கியஸ்தர் ஒருவர் அண்மையில் இலங்கையின் அரசாங்க உயர்மட்டத்தினருடன் கலந்துரையாடலை மேற்கொண்டு அரசாங்கத்தின் இணக்கத்தைப் பெற்றிருந்ததுடன் தற்போது அரசாங்கமும் அவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

அண்மைக்காலமாக கடற்கொள்ளைச் சம்பவங்கள் சடுதியாக அதிகரித்து வருவதுடன் இலங்கை மீனவர்கள் பலரும் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற கடற்கொள்ளைச் சம்பவங்களின் போது அதிரடி நடவடிக்கைகள் மூலம் 118 கொள்ளையர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச சமுத்திரவியல் பணியகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்களால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு மட்டும் 07 மில்லியன் டொலர்களுக்கும் அதிகம் என்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறான சூழ்நிலையில் கடற்கொள்ளையர்கள் தொடர்பான விசேட நீதிமன்றத்தை இலங்கையில் நிறுவுவதற்கான செலவாக ஐந்து மில்லியன் டொலர்கள் நிதியுதவியை அளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை இணங்கியுள்ளது.

# மானிய உரத்திற்குப் பதில் மணலும் கழிவு நெல்லும்

(கொழும்பு)

மானிய அடிப்படையிலான 50 கிலோ கிராம் உரத்திற்குப் பதிலாக மண் மற்றும் கழிவு நெல் அடங்கிய 270 பைகளை வெலிகந்த பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மஹிந்த சிந்தனை கொள்கையின் கீழ், கல்முனைப் பகுதி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவிருந்த உரங்களுக்குப் பதிலாக இக்கழிவுப் பொருட்கள் பைகளில் அடைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிகந்த - திருகோணமடு பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடியில் லொறியொன்று தடுக்கப்பட்டு சோதனையிடப்பட்ட போதே இந்தப் போலி உரப்பைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பிரதேசத்திலிருந்து போலி உரம் கொண்டு செல்லப் படவுள்ளதாக தகவல் கிடைத்ததையடுத்து வெலிகந்தை பொலிஸ் நிலையத்தினால் மேற்படி சோதனைச் சாவடியிலிருந்த பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதன் மூலம் இப்போலி உரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# அசௌகரியங்களைப் புறந்தள்ளிவிட்டு பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுங்கள்

## யாழ். மக்களிடம் பாதுகாப்புப் படையினர் வேண்டுகோள்


(யாழ்ப்பாணம்)

படையினரின் வீதிச் சோதனைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகளால் ஏற்படும் தாமதங்களையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் பாதுகாப்பு என்ற விடயத்துக்கு முதலிடம் கொடுங்கள். இவ்வாறு இராணுவத்தின் யாழ். தலைமையகம் யாழ். பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பாதுகாப்புப் படையினர் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும்.

'உங்கள் பாதுகாப்புக்காக இராணுவத்துக்கு ஒத்துழையுங்கள்' என்கிற தலைப்பில் படையினரால் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்ற துண்டுப் பிரசுரங்கள், பொது இடங்களில் தொங்க விடப்பட்டு இருக்கின்ற 'பனர்கள்' ஆகியவற்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் முழுமையாக தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பொதுமக்களின் சுதந்திரத்துக்கு தடைகளை ஏற்படுத்தும் வகையில் ஆயுதங்களை கையில் ஏந்திக் கொண்டு சிலர் பொதுமக்களின் சொத்துக்களைச் சூறையாடிக் கொண்டும், கப்பங்களை பெற்றுக் கொண்டும், உயிர்ச் சேதங்களை ஏற்படுத்திக் கொண்டும் யாழ். குடாநாட்டில் பல விதமான அநியாயச் செயல்களை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

கடந்த 30 வருட யுத்த காலத்தில் மக்களுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியமையைப் போல மீண்டும் பல இடையூறுகளை இவர்கள் ஏற்படுத்தி வருகின்றனர் என்று என்று பாதுகாப்புப் படையினருக்கு தெரியவந்துள்ளது.

இவர்களின் குற்றச் செயல்களை மட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு பூரண பாதுகாப்பைப் பெற்றுக் கொடுங்கள் என்று சில பெரியவர்கள் எம்மைக் கேட்டுள்ளார்கள்.

இந்நிலையில் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பாதுகாப்புப் பிரிவின் செயற்பாடுகளை அதிகரித்து உள்ளார். யாழ். குடாநாட்டில் பூரண பாதுகாப்பை ஏற்படுத்தவென சோதனைச் சாவடிகள், உடனடிப் பரிசோதனைகள், நடமாடும் பாதுகாப்புச் சேவைகள், காவல் கடமைகள், ரோந்துகள் போன்றன அதிகரிக்கப்பட்டுள்ளன.

மக்களுக்குப் பூரண பாதுகாப்பை வழங்குகின்றமைக்காகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியமை பொதுமக்களாகிய உங்களின் கடமையாகும். தரைப் படையினர், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எல்லாப் பிரதேசங்களிலும் சுற்றி வளைப்புத் தேடுதல்களை அதிகரித்துள்ளனர்.

வன்செயல்களை மிகவும் குறுகிய காலத்துக்குள் அடியோடு இல்லாது ஒழிக்க நடவடிக்கை எடுத்து உள்ளனர். இராணுவத்தின் யாழ். தலைமையகத்தின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்சமயம் இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டால் அவற்றை கவனியாமல் பூரண ஒத்துழைப்பை பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்குங்கள் என்று மிகவும் பணிவுடன் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்படக்கூடிய தாமதங்கள், இடையூறுகள் போன்றவற்றைக் காட்டிலும் பாதுகாப்புக்கு முதலிடத்தைக் கொடுங்கள.

ஒவ்வொருவரினதும் உயிர், சொத்து ஆகியவற்றைப் பாதுகாக்கின்றமைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். உங்களுடையதைப் போன்றனவே ஏனையோரின் உயிர்களும், சொத்துக்களும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசாரத்தில் அரச ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது

## இதைக் கண்காணிக்க விசேட அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு சுயேட்சையாகவோ அல்லது கட்சி சார்பில் முன்னெடுக்கும் எந்தவொரு நடமாடும் பிரச்சார நடவடிக்கைகள், நிகழ்வுகளில் பங்கேற்று கொள்வதினை நிறுத்திக் கொள்ளுமாறு அரச அதிகார சபைகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் தேர்தல் செயற்பாடுகளில் அரச ஊழியர்களை பயன்படுத்துமாறும் எங்கும் குறிப்பிடப்பட்வில்லை என ஜனாதிபதி செயலகம் உட்பட அரச நிறுவனங்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தலை அண்மித்த காலப்பகுதியில் அரச ஊழியர் ஒருவர் இடம்மாற்றம் பெற்றாலோ பதவி உயர்த்தப்பட்டாலோ அவர் தேர்தல் பணிக்கு அமர்த்தப்பட மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முன்பு இடம்பெற்ற தேர்தலின்போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளான அரச உடமைகள் பாவனை என்பதனை தடுப்பதற்காக கண்காணிப்பு நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிபிட்டுள்ளார்.

இவை தொடர்பில் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அரச கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் அரசு சார்ந்த நிலையங்கள் கண்காணிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாதாள உலகக் குழுக்கள் நீதிமன்றில் மோதல்!

## கொழும்பில் பரபரப்புச் சம்பவம்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பாதாள உலக நபரான பொட்டு நௌபர் எனப்படும் எம்.நௌபர் மீது கொழும்பு மேல் நீதிமன்றில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வழக்கு விசாரணையொன்றுக்காக நீதிமன்றுக்கு வந்திருந்த நௌபர் மீது நீதிமன்ற தடுப்புக் கூண்டில் வைக்கப்பட்டிருந்த அவரின் எதிரிக் குழுவொன்றைச் சேர்ந்த கைதிகளால் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நௌபர் மீது மேற்படி கைதிகள் கைவிலங்குகளை வீசி எறிந்தனர்.

தாக்குதல் நடத்தியவர்கள், நௌபர் காரணமாகவே தாம் சிறையில் இருப்பதாகவும் அவரைக் கொல்லுவோம் எனவும் சத்தமிட்டுள்ளனர்.

அதேவேளை, சாட்சியமளிப்பதற்காக தன்னை சிறை அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்ததாகவும் அவர்கள் தன்னைப் பாதுகாக்க வேண்டும் எனவும் பொட்டு நௌபர் சத்தமிட்டார். இறுதியில் இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### இந்திய மீனவர்களுக்கு...

முனை கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட இந்திய மீனவர்களுக்கு உடு புடவைகள் மற்றும் உணவு ஆகிய மனிதாபிமான தேவைகளை வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தார்.

இவற்றைவிட நேற்றைய மேற்படி சம்பவம் காரணமாக இந்திய மீனவர்களுக்கும் உள்ளூர் மீனவர்களுக்குமிடையில் முறுகல் நிலை தென்பட்டது. இந்த விடயத்திலும் அமைச்சர் தலையிட்டு இரு தரப்பு பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தி ஒரு சமரசத்துடன் கூடிய சுமுக நிலையைத் தோற்றுவித்தார்.இதற்காக பல மணிநேரமாக கடற்கரையில் அமைச்சர் தரித்து நின்று தேவையான அனைத்து தரப்புடனும் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

கடற்படைத் தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபருடன் அமைச்சரவர்கள் தொடர்புகொண்ட நிலையில் வடபகுதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோன் மற்றும் வடபிராந்திய பதில் கடற்படைக் கட்டளைத் தளபதி கொமடோர் என்.கே.டி. நாணயக்கார ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர். இச்சமயம் இந்திய கடற்றொழிலாளர்களினால் தமக்கு ஏற்பட்ட நீண்டகால பாதிப்புக்களை எடுத்துக்கூறிய கடற்றொழில் சமாசத்தலைவர் எமிலியாம்பிள்ளை மற்றும் கடற்றொழில் சங்கத் தலைவர் அருள்தாஸ் ஆகியோர் தமக்கு உரிய நியாயத்தை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நாகபட்டினம் மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மேற்படி நூற்றியெட்டு தமிழக கடற்றொழிலாளர்களும் நாளைய தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் , இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடமராட்சி கடற்றொழிலாளர்களுடனும், கடற்றொழில் சமாச பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கடற்றொழிலாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். இச்சமயம் வடபகுதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோனும் உடனிருந்தார். இந்நிலையில் தாம் வடபகுதி கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் மேற்கொண்டதை இந்திய கடற்றொழிலாளர்கள் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டதுடன் தமக்கு மன்னிப்பளித்து விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

மற்றொருபுறம் ஒரேசமயம் நூற்றியாறு பேர் பருத்தித்துறை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்தும் அவர்களை பராமரிப்பதில் உள்ள சிரமங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை வழங்குவதற்கு வடமராட்சி கடற்றொழில் சமாசத்தினர் முன்வந்துள்ளனர். இதனை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரே தாய்மொழியினை பேசுவது மாத்திரமல்லாமல் வாழ்வாதாரத்திற்காக ஒரே தொழிலை மேற்கொள்பவர்கள் என்ற ரீதியில் வடமராட்சி சமாசத்தினரின் மனிதாபிமானத்தை பாராட்டியதுடன் சட்டம் தனது கடமையினைச் செய்து தமிழக கடற்றொழிலாளர்கள் மீண்டும் தமது தாயகம் திரும்பும் வரையில் அவர்களை கௌரவமாக பாதுகாத்து பராமரித்து அனுப்ப வேண்டியது எமது கடமை என்பதையும் வலியுறுத்தினார்.

### எல்லை தாண்டும்....

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போதும் மீனவர்கள் குறித்த விடயங்கள் பேசப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மஞ்சள்கோட்டு...

இதனைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### வேட்புமனு...

எனினும் மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் மேற்படி மறுதவணை நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### இந்திய....

கடற்படை அதிகாரி கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் கடற்படையால் பொறுப்பேற்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பில் இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

### தண்ணீரில்...

ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய புகையைக் கக்காது.

ஏராளமான வெளிநாட்டு நிறுவனங்கள் இவரின் தொழில் நுட்பத்தை விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளன.


ஆனால் தாய் நாட்டுக்குத்தான் இத்தொழில்நுட்பம் பயன்படுத் தப்பட வேண்டும் என்பதில் இவர் உறுதியாக உள்ளார்.

ஆயினும் இவருக்கு தாய் நாட்டில் உதவி செய்ய எவரும் முன் வரவில்லை என்பது மன வருத்தத்துக்குரிய விடயம்.

### அகற்றப்படுகிறது...

தொடர்ந்தே இம்முகாம் அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மினிமுகாம் அமைந்திருந்த இடம் தனியார் ஒருவருக்கு சொந்தமான வீடு என்பதுடன், தற்போது முகாம் அமைந்திருந்த பகுதி முற்றாக அகற்றப்பட்டு கடற்படையால் அமைக்கப்பட்ட முட்கம்பிகள், மண் அணைகள் என்பன அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)



படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்.


# இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு மீண்டும் உயிர் கொடுங்கள்

## புதுடில்லி நோக்கி நடைப்பயணம்

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து டில்லியை நோக்கி நடைப்பயணம் மேற்கொள்ளும் தமிழக மற்றும் ஒரிஸா மாநிலங்களிலுள்ள அகதிமுகாம்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் மஹாராஷ்டிரா மாநிலத்தை அடைந்துள்ளனர்.

டில்லியிலுள்ள அரசாங்கத் தலைவர்கள் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களை சந்தித்து 1987 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்திய -இலங்கை உடன்படிக்கை அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துவதே இப்பயணத்தின் நோக்கமாகும்.

2005 கிலோமீற்றர் தூரம் கொண்ட இப்பயணம் கடந்த ஜனவர் 16 ஆம் திகதி தமிழ் நாட்டில் ஸ்ரீ பெரும்புத்தூரிலுள்ள ராஜீவ் காந்தி நினைவகத்திலிருந்து ஆரம்பமாகியது. மார்ச் 18 ஆம் திகதி அவர்கள் டில்லியை சென்றடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ.என்.டி.எல்.எவ்.) ஏற்பாட்டில் இந்த நடைப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. ஈ.என்.டி.எல்.எவ். செயலாளர் நாயகம் எஸ்.வாசிகன் இது தொடர்பாக இந்து பத்திரிகைக்குத் தெரிவிக்கையில், இந்திய அமைதி காக்கும் படையினரை பின்தொடர்ந்து 3700 தமிழர்கள் வந்ததாக தெரிவித்தார்.

அவர்கள் தமது தாயகத்திற்கு திரும்பிச் செல்ல விரும்பினாலும் அங்கு நிலைமை உற்சாகமளிப்பதாக இல்லை என வாசிகன் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட கரடிமோட்டை வனப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது யுத்த உபகரணங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன.

3 கிலோ கிராம் சி-4 ரக வெடிபொருள், செயலிழந்த மின்கலங்கள் 44, 60 மி.மீ மோட்டார் ரவைகள் 5, 40 மி.மீ மோட்டார் ரவைகள் 3, ஆர்.சி.பீ 1, தற்கொலை குண்டுகள் 36 மற்றும் ரி-56 ரவைகள் 620 ஆகிய யுத்த உபகரணங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டவை ஆகும். கைப்பற்றப்பட்ட யுத்த உபகரணங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைக்கு வெள்ள நிவாரணத்துக்காக ஐ.நா. சபை 18.3 மில். அமெரிக்க டொலர் உதவி

இலங்கையின் வெள்ள நிவாரணத்துக்காக ஐக்கிய நாடுகள் சபை கோரியிருந்த தொகையில், 18.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இலங்கையில் கடந்த நாட்களில் வெள்ளத்தினால் பாதிப்படைந்திருந்த மக்கள் தற்போது படிப்படியாக தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பும் நிலை ஏற்பட்டமைக்கு, ஐக்கிய நாடுகள் சபை மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

எனினும் தொடர்ந்தும் சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் முகாமிலேயே தங்கி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பின் போது, அதன் பேச்சாளர் மார்டின் நெசர்ஸ்கீ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் மழை ஏற்படும் பட்சத்தில், மீண்டும் இலங்கையின் பல பிரதேசங்கள் பாதிப்படையும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான இணைப்புச் செயலகம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் பாதிப்படைவர்களுக்கான உதவிகளை வழங்க அரசாங்கமும், இணைப்புச் செயலகமும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 1லட்சத்து 92 ஆயிரம் மக்களுக்கு ஆறு நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உலக உணவுத்திட்டம் விநியோகித்துள்ளது.

# கொடிகாமத்தில் ஆணின் சடலம்

கொடிகாமம் பகுதியில் தனித்து வாழ்ந்து வந்த ஒருவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கொல்லப்பட்டவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் அதேஇடத்தைச் சேர்ந்த ஐம்பத்தைந்து வயதையுடைய வைத்தியலிங்கம் அமிர்தலிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# விமானத்தில் வெடிகுண்டு; புரளி கிளப்பியவர் கைது

சிறிலங்கன் வானூர்தி சேவைக்கு சொந்தமான வானூர்தியொன்றில் குண்டுப் புரளியை ஏற்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜையை மாலைதீவு பொலிஸார் விடுவித்துள்ளனர். இவரின் நடவடிக்கைகளை பிழையாக வானூர்தி சிப்பந்திகள் விளக்கிக் கொண்டதனை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து லண்டன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இந்த விமானம் குண்டுப் புரளி காரணமாக மாலைதீவு வானூர்தி தளத்தில் அவசரமாக இறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வயது முதிர்ந்த பிரிட்டிஷ் பயணியொருவர் வானூர்தியில் பயணிப்பவர்கள் அதிக சத்தத்தை இடுகிறார்கள் எனத் தெரிவித்த முறைப்பாட்டை விமானச் சிப்பந்திகள் குண்டுக்கான எச்சரிக்கை என எண்ணியதை அடுத்தே அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக மாலைதீவின் பொலிஸ் பேச்சாளர் அகமட்சியாம் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

## அத்து மீறிய இந்திய மீனவர்....

இம்முயற்சியின் ஆரம்பத்தில் இந்திய மீனவர்களுக்கும் உள்ளூர் மீனவர்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் நடந்தது. அது பின்னர் சிறு கைகலப்பாகவும் மாறியது. இதில் இரு தரப்பிலும் சிலர் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

எனினும் நேற்று மாலை வரை மேற்படி கடற்பரப்பில் வைத்து 108 இந்திய மீனவர்களுடன் 18 ரோலர் மீன்பிடிப் படகுகள் உள்ளூர் மீனவர்களால் கைப்பற்றப்பட்டு கரைக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

இவ்வாறு வடமராட்சி மீனவர்களால் பிடித்து வரப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரும் தற்போது பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கேள்வியுற்ற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பவ இடத்துக்கு சமுகம்கொடுத்து நிலைமைகளை நேரில் கேட்டறிந்தார்.

மேலும் பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்து நிலைமைகளை அவதானித்தனர்.

மேற்படி சம்பவத்தின்போது வடமராட்சி மீனவர்கள் குழுவுக்கும் இந்திய மீனவர்கள் குழுவுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும், இரு தரப்பிலும் மீனவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகியிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழகத்தில் நாகபட்டினம், காரைக்கால் பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ள இந்திய மீன்பிடிப் படகுகளின் நடமாட்டம் தொடர்பாக மீனவ அமைப்புகள் போர்க்கொடி தூக்கிய நிலையில், நேற்றைய தினம் உள்ளூர் மீனவர்கள் இந்திய மீனவப் படகுகளை சுற்றிவளைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலகம் அடக்கும்...

கலகம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் வாகனங்களில் ஏற்றிவரப்பட்டு என்றும் இல்லாத பாதுகாப்பு நடவடிக்கையில் நேற்றுக் காலை யாழ். பஸ் நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

அத்தோடு யாழ்.நகரில் அங்காங்கே இராணுவத்தினரும் தரித்து நின்றனர். பொது மக்களில் பலருக்கு இந்நடவடிக்கை அச்சம் கலந்த பல கேள்விகளை எழுப்பியது.

எதிர்க் கட்சி ஒன்றின் ஊர்வலம் ஒன்று இடம்பெற இருந்த நிலையிலேயே இப்பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பின்னர் தகவல்கள் வெளியாகின.

இச்செய்தி எழுதப்படும் வரை எந்த அரசியல் கட்சியின் ஊர்வலமும் இடம்பெறவே இல்லை. பொலிஸாரும், இராணுவத்தினரும் காத்திருந்து விட்டு சென்றதாகத் தெரியவருகிறது.

10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு
கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை
நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.
38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

அனுப்ப வேண்டிய முகவரி:-
தினமுரசு
விளையாட்டு அரங்கு
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
ICC Cricket World Cup 2011

போட்டி இல: 02

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

01) 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நியுசிலாந்து கென்யா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றிபெறப்போகும் அணி ஏது?
02) 20ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை மற்றும் கனடா அணிகளுக்கிடையிலான போட்டி எந்த மைதானத்தில் நடைபெறவுள்ளது?

பெயர்:- ..........
முகவரி:- ..........
போ.இல:- ..........
விடைகள்: 01) ..........
02) ..........

உங்கள் விடைகளை 18ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்

# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பவதி ஆனந்தராசா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனந்தா வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி ஆனந்தராசா அவர்கள் (12.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசு சின்னராசா திருமதி சின்னராசா திலகவதியின் அன்பு மகளும், வல்லிபுரம் ஆனந்தராசாவின் பாசமிகு மனைவியும், நிமலா, மயூரன் (நோர்வே), தர்சிகா (மட்டக்களப்பு பல்கலைக்கழகம், 2 ஆம் ஆண்டு), கிரிசாந் (கனடா), நிருஜன் ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பகரன் (ஜேர்மனி),இராசவதி (கனடா), சித்திரா (நோர்வே), சுமதி (கனடா), மாலதி (லண்டன்), லகிதா (ஆசிரியை, யா/கலாநிதி தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சசீகரன் (அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம், சங்கானை), வாசுகி (யாழ்.பல்கலைக்கழகம், 2 ஆம் வருடம்) ஆகியோரின் அன்பு மாமியும், திசானாவின் பாசமிகு பேர்த்தியும், திருநாவுக்கரசு (முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்), ஜெயராசா (கனடா), குணசிங்கம் (டென்மார்க்) காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2011) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தாவீதி,
மானிப்பாய்.
தொ.பே.0214921897
0775242495

தகவல் :
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

(C/107)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.